
பக்கங்கள்-16 | 06.பங்குனி.2022 | விலை–40.00




# தினப்புயல்

THINAPPUYAL

තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –375




## எரிபொருள் தட்டுப்பாடும், மின்வெட்டும் அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுகின்றதா?

## அமெரிக்காவின் இராஜதந்திர அரசியல் - உலகப் போராக மாறும் அபாயம்

## காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டமும் பயங்கரவாதத்திற்கு எதிரான கையெழுத்து வேட்டையும்

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# இலங்கையை குறிவைக்கும் வல்லரசு நாடுகள்





இன்றைய அரசியல் சூழ்நிலையில் சர்வதேச ரீதியாக ஏற்பட்டிருக்கக்கூடிய வல்லரசுநாடுகளின்யுத்ததந்திரோபாயங்கள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை குறிவைக்கின்ற ஒரு பொருளாதார யுத்தமாகவே அமைகின்றது. குறிப்பாக இதனை (எக்கொனோமிக் வோர்) என்று கூறுவர். வல்லரசு நாடுகள் தமது ஆயுத உற்பத்தியினையும் பொருளாதார வளர்ச்சியினையும் தமது நாட்டின் உட்கட்டமைப்பு வளர்ச்சியினையும் உறுதிப்படுத்திக்கொள்வதற்காக எண்ணெய் வள நாடுகளையும் கனிய வளங்கள் உள்ள நாடுகளின் செயற்பாடுகளை நலிவடைய செய்யும் நோக்கில் குறித்த நாடுகள் செயற்படுகின்றன. இந் நாடுகளின் பலப்பரீட்சையாக அனுகுண்டு பரிசோதனையை நடத்துவதன் ஊடாக தமது நாட்டை ஒரு வல்லரசு நாடாக மாற்றும் திறனையும் அவற்றுள் அபிவிருத்தியடைந்த நாடுகள் தமது பலப்பரீட்சையை உருவாக்கிக்கொள்வதற்கு ஆங்காங்கே பேச்சுவார்த்தைகளும் அனு ஆயுத குறைப்பு நடவடிக்கைகளும் இடம்பெற்றுவருகின்றமை ஒரு செயற்பாடாகும். இதனடிப்படையில் சர்வதேச ரீதியாக ஒரு போர் இடம்பெற்றால் அதனை முகம்கொடுப்பதற்கு நீர் வளம். நில வளம். மழை வளம் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு நாடுகளை தெரிவு செய்வது அபிவிருத்தியடைந்த நாடுகளின் மிக முக்கிய அம்சமாகும். அதனடிப்படையில் இலங்கையை பொறுத்தவரையில் கொழும்பு துறைமுகம். அம்பாந்தோட்டை துறைமுகம். திருகோணமலை துறைமுகம் போன்ற மூன்று துறைமுகமும் இன்றைய சமகால அரசியல் காலகட்டத்தில் முக்கியம் வாய்ந்தவையாக அமையப்பெற்றுள்ளது. இயற்கை அரண்களை கொண்ட திருகோணமலை துறைமுகம் யுத்த களத்திற்கு சாதகமான ஒரு தன்மையை கொண்டிருக்கின்றது. தற்பொழுது அதனை சூழ சீனா. இந்தியா. அமெரிக்கா இந்த மூன்று நாடுகளும் இலங்கை அரசாங்கத்துடன் அரசியல் ஒப்பந்தங்களை மேற்கொண்டு இந்த நாட்டிற்குள் கால் பதித்துள்ளார்கள்.

குறிப்பாக இந்தியா - பாகிஸ்தான். சீனா - தைவான். ரஷ்யா - உக்ரேன். இஸ்ரேல் - பலஸ்தீன் போன்ற நாடுகளில் யுத்தங்கள் அவ்வப்போது இடம்பெறுவது வழமையானதொன்று. இங்கு வரலாற்று ரீதியாக குறித்த நாடு எல்லைகளை சுவீகரிப்பதற்கான ஒரு யுத்தமாகவே இந்த யுத்தம் இடம்பெற்று முடிவடைவது வழமையானது. அண்மையில் காசா - இஸ்ரேல் யுத்தம் முடிவடைந்த கையோடு இந்தியா - பாகிஸ்தான் எல்லை யுத்தம் இடம்பெற்றது. தைவான் ஒரு பகுதியை சீனா கைப்பற்றுவதற்கு தீவிர முயற்சிகளை எடுத்துவருகின்றது. சர்வதேச ரீதியாக தன்னை ஒரு சர்வாதிகார நாடாக காண்பித்துக்கொண்டிருக்கின்ற அமெரிக்கா. தற்பொழுது அதனுடைய பொருளாதார நிலைமை கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக உலகளாவிய ரீதியில் மாற்றமடைந்து சீனாவை விட பின் தள்ளப்பட்ட ஒரு நிலைமை எற்பட்டது. உலக பொருளாதார சந்தையில் அதிக உற்பத்திகளை உருவாக்குகின்ற ஒரு நாடாக சீனா திகழ்கின்றது. கொரோனா வைரசின் தாக்கம் காரணமாக சீனா தன்னுடைய நாட்டை வளப்படுத்தி இன்று சர்வதேச நாடுகளுக்கு சவால் விடுகின்ற ஒரு நாடாக தன்னை வளப்படுத்திக்கொண்டிருக்கின்றது.

இன்று சீன நாட்டிற்கு அனைத்து நாடுகளும் பயப்படும் ஒரு நிலைமை தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது. சர்வதேச ரீதியாக நாடுகள் பின்னடைவை சந்திக்கின்ற பொழுது தனது பணத்தைக் கொடுத்து அந்த நாடுகளை முன்னேற்றுகின்ற ஒரு நடவடிக்கையை சீன அரசாங்கம் செய்துவருகின்ற அதேசமயம். சர்வாதிகார ரீதியில் குறித்த நாட்டிற்குள் தனது உளவு நடவடிக்கையை மேற்கொண்டு தனக்கு சார்பான யுத்த கட்டமைப்புக்களை வளர்த்து வருகின்றது. இதுவொரு வகையான சீனாவின் ஆக்கிரமிப்பு. அமெரிக்காவை பொறுத்தவரையில் இஸ்ரேல் நாட்டுடன் இணைந்து பல நாடுகளை தாக்குகின்ற நடவடிக்கைகளை கடந்த காலங்களில் மேற்கொண்டு வந்தது. இன்றைய நாடுகளின் அபார வளர்ச்சி காரணமாக அனுஆயுதங்களை வைத்து குறித்த வல்லரசுகளை மிரட்டுகின்ற செயற்பாடாகவே சீனா தற்பொழுது களமிறங்கியுள்ளது. ரஷ்யா - உக்ரேன் அனுஆயுத ஒப்பந்தங்களை செய்துகொண்ட பொழுதிலும் ரஷ்யா. உக்ரேன் மீது தாக்குதலை மேற்கொண்டது. அதுபோன்று அமெரிக்கா ஈராக்குடன் அனுஆயுத ஒப்பந்தத்தை செய்துகொண்ட பொழுது ஈராக் மீது தாக்குதலை மேற்கொண்டது. ஈராக்குடன் அனுஆயுத பரிசோதனையை நடத்துவதற்கு அமெரிக்கா முயற்சிகளை மேற்கொண்ட பொழுதிலும் அது இடம்பெறாததன் காரணமாகவே ஈரான் மீது அமெரிக்கா விமானங்களை வைத்து தாக்குதலை மேற்கொண்டது. இவ்வாறு பொருளாதாரம் பின்தங்கிய நாடுகள் மீது அதனுடைய அபார வளர்ச்சியை கண்டுகொள்ள முடியாத குறித்த வீட்டோ பவர் கொண்ட நாடுகளும் (சீனா. அமெரிக்கா. ரஷ்யா. பிரான்ஸ். பிரித்தானியா) மற்றும் இந்தியா இஸ்ரேல் போன்ற நாடுகளும் ஒரு நாட்டின் மீது படையெடுப்பை மேற்கொள்கின்ற நடவடிக்கைகளை சர்வதேச ரீதியாக மேற்கொண்டுவருகின்றன. இதன் காரணமாக உலகளாவிய ரீதியில் பொருளாதார ரீதியிலான தாக்கங்கள் பரவலாக ஏற்பட்டிருக்கின்றது. அதனை சீர்செய்வதற்கு கறுப்பு பணம் தேவைப்படுகின்றது. அவ்வாறான ஒரு நிலைமையே தற்பொழுது இலங்கையிலும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

டொலரின் பெறுமதி மேலோங்கி இலங்கையின் பொருளாதாரம் மென்மேலும் பின்தங்கியுள்ள நிலைமை உருவாகியுள்ளது. இந்த அரசாங்கத்தினால் கொரோனா வைரசின் தாக்கத்தின் பின் சர்வதேச ரீதியாக வியாபாரங்களை முன்னெடுக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. குறித்த நாடுகள் விவசாயத்தை மழுங்கடிக்கின்ற செயற்பாடுகளை மேற்கொள்வதன் ஊடாக அந்த நாட்டின் உற்பத்தியை குறைக்கின்ற செயற்பாடுகளையே மேற்கொண்டுவருகின்றார்கள். இன்றைய சூழலில் உலக பொருளாதார சந்தையில் முன்னனியில் திகழ்கின்ற வீட்டோ பவர் கொண்ட நாடுகள் தமது இருப்பை தக்கவைக்க இலங்கை போன்ற நாடுகளை மென்மேலும் அதளபாதாளத்திற்குள் தள்ளி சோமாலிய நாட்டின் நிலைமைக்கு கொண்டுவருகின்ற சூழ்நிலையை உருவாக்கி வருகின்றார்கள். பூகோள அரசியலின் செயற்பாடுகள் நாளுக்கு நாள் மாற்றம் கண்டுவருகின்ற இந்த காலத்தில் இலங்கை சர்வதேச நாடுகளிடமிருந்து எவ்வாறு தனது நாட்டை காப்பாற்றப்போகின்றது என்பது தான் இன்றைய பேசுபொருளாக இலங்கைத்தீவில் இடம்பெறும் ஒரு விடயமாகும்.

குறித்த யதார்த்தத்தை விளங்கிக் கொள்ளாத வரையில் இலங்கையின் அரசியல் தலைவர்கள் தமது சுயலாப அரசியலுக்காக சர்வதேச நாடுகளின் உதவிகளை பெற்றுக்கொண்டு இந்த நாட்டு மக்களுக்கு தீங்கை ஏற்படுத்துகின்ற உற்பத்திகளை மேற்கொண்டு வருகின்றார்கள். அதன் முதலாவது கட்டமாக ஒரு நாட்டின் விவசாயத்தை மழுங்கடிப்பதற்கு பாவனைக்கு உதவாத உரம் ஒன்றினை சீனாவிடமிருந்து கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஏற்கனவே இலங்கையில் பயன்படுத்தப்பட்டுவந்த யூரியா பசளை தடை செய்யப்பட்டுள்ள நிலையில் அரசு பாரிய சிக்கல்களை எதிர்கொண்டிருக்கின்றது. உள்நாட்டு போர் கடந்த 30 ஆண்டுகளாக இடம்பெற்று தற்பொழுது முடிவுக்கு வந்த நிலையில் இலங்கையில் தற்பொழுது பொருளாதார நிலைமை மிகவும் மோசமான கட்டத்தை எட்டிப்பிடித்துள்ளது. இங்கு வாழுகின்ற தமிழினம் தமக்கான ஒரு தாயகத்தை கோரி போராடினார்கள். தற்பொழுது சர்வதேச ரீதியிலான கொரோனா வைரசின் தாக்கத்தை அடுத்து சர்வதேசத்தில் இலங்கை தொடர்பாக இடம்பெறுகின்ற பேச்சுவார்த்தைகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் காணப்படுகின்றது. ஜெனீவாவில் இடம்பெறுகின்ற பேச்சுக்களும் அவ்வாறே இடம்பெறுகின்றது. ஆகவே சர்வதேசரீதியாக அதிகாரத்தை பயன்படுத்தும் நாடுகளிடம் இருந்து இலங்கை தற்பொழுது தன்னை தற்பாதுகாத்துக்கொள்ள வேண்டிய நிலைக்குதள்ளப்பட்டுள்ளது. எனவே உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதன் ஊடாகவும் இலங்கையில் இருந்து ஏற்றுமதிகளை துரிதப்படுத்துவதன் ஊடாகவும் இந்த நாட்டை வளமான ஒரு நாடாக மாற்றுவதற்கு ஏதுவான நிலைமையை அரசாங்கம் உருவாக்கிக்கொள்ள முடியும்.

குறிப்பாக 30 ஆண்டு காலமாக இந்திய நாட்டினுடைய அரவணைப்பில் இருந்த இலங்கை அரசாங்கம் தற்பொழுது இந்தியாவை பகைத்துக்கொண்டு இந்திய நாட்டின் இறக்குமதிகளையும் தடை செய்து அந்த நாட்டினுடைய இராஜதந்திர நடவடிக்கைகளுக்கு பாதகம் ஏற்படுகின்ற வகையில் இலங்கை அரசாங்கம் செயற்படுவதான குற்றச்சாட்டுக்கள் இந்திய அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டது. இந்தியாவின் இராஜதந்திர நகர்வுகளில் ஒன்றாக இலங்கை தமது நாட்டை வெறுத்து ஏனைய அதாவது குறிப்பாக சீனாவுடன் கைகோர்த்து செயற்படும் காரணத்தினால் எப்பொழுது இலங்கைக்கும் இந்தியாவிற்கும் நிரந்தர பகைமை உருவாகும் என்ற நிலைப்பாடே தற்பொழுது காணப்படுகின்றது. திருகோணமலை துறைமுகத்தை ஒரு காலத்தில் தனது கட்டுப்பாட்டுக்குள் இந்திய அரசாங்கம் வைத்திருந்தது. தற்பொழுது நிலைமை மாற்றப்பட்டு அமெரிக்கா. சீனாவுடைய ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகங்களில் ஒன்றாக அது விளங்குகின்றது.

ஆகவே இதனை அடிப்படையாக கொண்டு ஓர் போர் சூழலை இலங்கையில் உருவாக்கி மீண்டும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதையே இந்திய அரசு விரும்புகின்றது. சர்வதேச சரக்கு கப்பல்கள் ஆயுத கப்பல்கள் என பல்வேறு நாட்டு கப்பல்களை ஒரேநேரத்தில் நங்கூரம் இட்டு நிறுத்தக்கூடிய பாதுகாப்பான ஒரு அரணாகத்தான் திருகோணமலை துறைமுகம் விளங்குகின்றது. இதற்கு ஒல்லாந்தர் கால கோட்டைகளும் அதற்கு காப்பரண்களாக விளங்குகின்றது.

சர்வதேசரீதியாக ஏற்படுத்தப்பட்டுள்ள வைரஸ் தாக்குதல் காரணமாக சீனா அடுத்த கட்டமாக எந்த வைரசை பரப்பிவிடப்போகின்றது என்றவொரு அச்சமே தற்பொழுது சர்வதேச ரீதியாக காணப்படுகின்றது. உலக நாடுகளில் வைரஸ் தாக்கம் காணப்பட்ட பொழுது இலங்கையில் 5 பேர் வரையிலே மரணமடைந்தார்கள். ஆனால் சீனாவிலிருந்து பரப்பப்பட்ட வைரசின் காரணமாக இலங்கையில் ஆயிரக்கணக்கான உயிரிழப்புக்கள் எற்பட்டது. ஆனால் சீனாவினுடைய தலையீட்டை இலங்கை அரசு மறுக்கவோ அல்லது அவர்களை இந்த நாட்டிலிருந்து வெளியேற்றவோ அவர்கள் விரும்பவில்லை. தொடர்ந்தும் சீன காலணித்துவத்திற்குள் இலங்கை அரசு தள்ளப்பட்டுக்கொண்டே செல்கின்றது. இந்த நிலைமை மாற்றப்படுகின்ற பொழுதே இலங்கை அரசு தன்னை நிர்வகித்துக்கொள்ள முடியும். மற்றுமொருபுறத்தில் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ளவும். சர்வதேசரீதியில் நாடுகளிடையே காணப்படுகின்ற முறுகல் நிலையை இல்லாது ஒழிக்கவும் இலங்கை அரசாங்கமானது சீனாவின் கைப்பொம்மைப் பிடியிலிருந்து வெளிவரவேண்டும். அவ்வாறு வெளிவருகின்றபொழுதே சர்வதேசத்திலிருந்து எம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும்.



யுத்தம் முடிவுற்ற நிலையில் சமாதான நடவடிக்கைகளுக்காக அதில் யுத்த ஏற்பாட்டிற்காக பல நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக செயற்பட்டன. குறிப்பாக விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்காக. ஆனால் விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் இப்படியான ஒரு பொருளாதார பின்னடைவு ஒருபோதும் ஏற்பட்டது கிடையாது. எனவே அரசாங்கம் பூகோள அரசியல் ரீதியான பிரச்சினைகளை சமாளிப்பதற்கு. எத்தனை பிரச்சினைகளை இலங்கையில் சமாளிக்கவேண்டும் என்பதே இன்றைய அரசியல் களத்தின் மிக முக்கிய விடயமாகும்.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## வரலாறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள தவறும் மனிதன்

இவ்வுலகில் மனித இனம் தோன்றி எத்தனையோ வருடங்கள் உருண்டோடிவிட்டது. புதிய புதிய மனிதர்கள் இவ்வுலகில் நாளாந்தம் பிறந்துகொண்டேயிருக்கிறார்கள். மனிதனின் அபரிமிதமான வளர்ச்சியால் அன்றிருந்த மனிதனின் வாழ்க்கை நிலை இன்று இல்லை. இயற்கையோடு வாழ்ந்த மனிதன் இன்று செயற்கைகளை இப்பூமிக்கு பரிசளித்து. வாழ்வையும் நடத்துகிறான். தொழில்நுட்பங்களால் விண்ணைத்தொடும் அளவிற்கு மனிதனின் வளர்ச்சி பரந்து விரிந்துகொண்டே செல்கிறது.

இந்த படிப்படியான வளர்ச்சிப் பாதையில். உலக நாடுகள் மனிதர்களின் பல போராட்டங்களை கண்டிருக்கிறது. இப்போராட்டங்களால் பல இழப்புக்களை மனிதன் சந்தித்திருக்கிறான். மில்லியன் கணக்கான உயிர்கள் பறிபோயிருக்கின்றன. சொல்லக் கூட வாய்கூசுகின்ற பல கோர சம்பவங்கள் இப் பூமியில் மனிதனால் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. தானே இப் பூமியில் பெரியவன். தன் நாடே இவ்வுலகை ஆள வேண்டும். இயற்கை தந்த வளங்களான கடல்கள். மலைகள். ஆறுகளை தானே கையகப்படுத்தவேண்டும் என துடிக்கிறான் இவ்வுலகம் மனிதனுக்கு மட்டுமானது அல்ல என்பதை மறந்து. மனிதன் இப்பூமியில் தோன்றுவதற்கு முன்னரே விலங்குகள். பறவைகள் இங்கு படைக்கப்பட்டவை. நாடுகளுக்கிடையிலான போட்டியின் காரணமாக யுத்தம் யுத்தம் என்றே பொழுதைக் கழித்த பல நாடுகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

சர்வாதிகாரிகளான இடியமீன். ஹிட்லர் போன்றவர்களை இன்றும் இவ்வுலக மக்கள் மறக்கவில்லை. பல்லாயிரக்கணக்கான மக்களைப் பலியெடுத்த ஜப்பான் மீதான அணுகுண்டுவீச்சை மக்கள் மறக்கவில்லை. இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை. மியன்மாரில் நடைபெற்ற கொலைகள். ஈரான். ஈராக் போன்ற நாடுகளில் நடைபெறும் யுத்தம் என கூறிக்கொண்டே போகலாம். இந்த கடந்த கால சம்பவங்களில் இருந்து. கசப்பான வரலாறுகளில் இருந்து பாடம் கற்றுக்கொள்ளாத மனிதன். இன்றும் இவ்வுலகை அழித்து வருகிறான். மனிதர்களைக் கொன்று வருகிறான்.

இதன் தொடர்ச்சியாகத் தான் தற்போதைய ரஷ்யா - உக்ரைன் யுத்தம் திடீரென ஆரம்பித்திருக்கிறது. நீண்ட நாள் புகைந்துகொண்டிருந்த நெருப்பு பற்றவைக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை. அபிவிருத்தியடைந்த பல நாடுகளின் சுயலாபம் ரஷ்ய - உக்ரைன் மக்களை வாட்டிவதைத்துக்கொண்டிருக்கிறது. பல உயிர்கள் நாளுக்கு நாள் செத்து மடிந்துகொண்டிருக்கிறது. உக்ரைன் மக்கள் தங்கள் சொந்த நாடுகளை விட்டு அகதிகளாக அண்டைய நாடுகளுக்குத் தப்பித்துப்போய்க் கொண்டிருக்கின்றனர். இந்த அவலம் ஏன்?

இன்றைய மனிதனின் சிந்தனை என்பது வேறு. வியாபாரம். சந்தைப்படுத்தல். தொழில்நுட்பம் என தான் பெரியவன். தானே இவ்வுலகை ஆளவேண்டும் என நினைக்கிறான். அதற்காகவே தன்னை நாளுக்கு நாள் பலப்படுத்துகின்றோம் என்ற நோக்கில் ஏனைய நாடுகளை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றான். இப்பூமி எல்லோருக்கும் உரித்தானது. வெறுமனே தனி மனிதனுக்கோ தனி இனத்திற்கோ சொந்தமானது அல்ல. தனது நாடுகளின் எல்லையை விரிவுபடுத்த இன்றும் இராணுவ வீரர்கள் சண்டைபிடிக்கும் நிலை தொடர்கின்றது. மனிதனுக்கு மகிழ்ச்சி. வளர்ச்சி என்பதெல்லாம் அவசியமானதுதான். அது அடுத்தவரைக் காயப்படுத்தாத வகையில் அமையவேண்டும். மனித சிந்தனைகளில் கட்டாயம் மாறுதல் வேண்டும். எமது அடுத்த சந்ததியினருக்காக இப்பூமி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை மனிதன் உணர்வது எப்போது?.

# 180 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



அத்துடன் முன்னுக்குச் செல்பவர் உங்களுக்கு இடையூறாக இருப்பார். நீங்களும் பின்னுக்கு வருபவருக்கு இடையூறாக இருக்கப்போகின்றீர்கள்). சாத்தியத்தைப் பொறுத்து பாதை அல்லது வீதி இடது பக்கம் திரும்புகின்றதாகவுள்ள இடமும் தெரிவுசெய்யப்பட்டது. இது எகேர்களின் சூட்டு நிலைகளை பாதையின் வளைவிலும் முன்பக்கமாகவும் நிலைப்படுத்த வசதியாக இருந்ததுடன், பின்வாங்கலின்போது சிறப்பணிகளுக்குக் கூடுதல் படைநகர்த்தல் சுதந்திரத்தையும் கொடுத்தது. இதன்போது, திறந்தவெளிக்கு (ஒற்றையடிப்பாதை, பாதை, காட்டிடை வெட்டை) வருகின்ற சந்தர்ப்பங்களும் சூட்டுக்குள் அகப்படும் சந்தர்ப்பங்களும் மிகக்குறைவாகும்.

தொடரணிக்கு முன்னால் சிறிய எண்ணிக்கையிலான குழு (எச்சரிக்கை செய்கின்ற அணி) நகருமானால், அதற்கு எந்தவிதத் தடையுந்தராமல் முன்னேறிச் செல்லவிட்டனர் (உண்மையில் பின்வரும் சம்பவங்களும் உள்ளன. அதாவது இவ்வாறான குழுக்களை சந்தடியின்றி அழித்தும் கைதியாகப் பிடித்தும் உடலங்களை வேகமாகத் தொலைவிற்கு இழுத்தும் சென்றுள்ளனர்.)

70-80 மீற்றர் தொலைவிலிருந்து சகல சூட்டாயுதங்களின் சுடுகுழலிலிருந்து செறிந்த திகைப்புச் சூடுகளுக்குத் தொடரணி இலக்கானது. எகேர்களின் நிலைகளுக்குத் தொடரணியிலிருந்து எதிரி கையெறிகுண்டு எறியமுடியாத வகையில் இவ்விடைவெளி குறைக்கப்படுவதில்லை. கெரில்லாக்களும் தந்திரோபாயத்தைக் கற்றுள்ளனர். அவர்கள் எங்கே அமைதியோ அங்கே குண்டெறிவதில்லை. மாறாக, எங்கிருந்து சூடுகள் வருகின்றனவோ அங்கேயே தொடராகக் குண்டுகளை எறிகின்றனர். தொடரணி ஒரு குழு இலக்காகும். சூட்டாயுதங்களால் அதன்மேல் மேற்கொள்ளப்படும் செறிந்த சூடுகள், அத்துடன் திசைப்படுத்தப்பட்ட கண்ணிவெடிகள் ஆகியன அற்புதமான பலாபலன்களைக் கொடுக்கின்றன. சூடு செறிவானதாகவும் பெறுபேறு மிக்கதாகவும் இருப்பதற்காக எகேர்கள் இயந்திரச் சுடுகலன் தன்னியக்கச் சூட்டு நிலையில் சுடும்போது, ஆடாமலிருப்பதற்காகவும் சூடுகள் விலத்தாமலிருப்பதற்காகவும் சுடுகலனின் குழலைக் காவுவாரால் மரத்தில் கட்டிவிட்டனர். இது இலகுவானதாகவும் வினைத்திறன் மிக்கதுமாகும். வழக்கமாகத் தன்னியக்கச் சுடுகலனால் ஒரு பூரண ரவைக்கூட்டிலுள்ள ரவைகளும் இயந்திரச் சுடுகலன்களால் குறைந்த இணைப்பியிலுள்ள (50 ரவைகள்) ரவைகளும் சுடப்படுகின்றன. இதைவிடக் கூடுதலாகச் சுடப்படுவதில்லை. ஆயுதச் சூட்டுத் தாக்குதல் 10 - 15 கன்கள் வரை தொடர்கின்றன. இப்பொழுது சிறப்பணியின் செயற்பாடு யாதெனில், உளறுவாயன் பிடிபட்டான் என்றால், அவனையும் இழுத்துக்கொண்டு கணப்பொழுதில் மறைந்துபோவதாகும். மருட்டும் நோக்கில் இன்னமும் சுட்டுக்கொண்டாலும், மறைந்து போய்விடவேண்டும். ஏனெனில், பதில் சூடுகள் 7 - 8 செக்கன்களின் பின் ஆரம்பிக்கின்றன. 20 – 25 செக்கன்களின் பின்னரோ, ஒழுங்கமைக்கப்பட்ட எதிர்ப்பு ஆரம்பிக்கின்றது. இவற்றிற்காகக் காத்திராமல் கால்களைப் பயன்படுத்தி, பாதுகாப்பான இடத்திற்கு (கணவாய், பள்ளத்தாக்கு, மலையின் மறுபக்கம் போன்றன) வேகமாக ஓடிச் சென்றுவிடவேண்டும். பின்வாங்கல் பாதைகள் முன்னரேயே நியமிக்கப்பட்டிருப்பதுடன், பயிற்சி செய்யப்பட்டும் இருக்கவேண்டும். ஒரு இயந்திரச் சுடுகலனாளன் பக்கவாட்டாகப் பாதுகாப்பான தூரத்தில் (எகேர்களின் நிலையிலிருந்து 200 மீற்றர் தொலைவில்) இருந்தவாறு சிறப்பணி பின்வாங்குவதற்கு காப்பளிக்கின்றான். பின்வாங்குகின்ற அணியின் காலடிச்சத்தம் கேட்காதவாறு சுட்டுக்கொண்டிருப்பதுடன், பின்னர் தானும் பின்வாங்குகின்றான்.

இப்பொழுது சிறப்பணியின் செயற்பாடு யாதெனில், உளறுவாயன் பிடிபட்டான் என்றால், அவனையும் இழுத்துக்கொண்டு கணப்பொழுதில் மறைந்துபோவதாகும். மருட்டும் நோக்கில் இன்னமும் சுட்டுக்கொண்டாலும், மறைந்து போய்விடவேண்டும். ஏனெனில், பதில் சூடுகள் 7 - 8 செக்கன்களின் பின் ஆரம்பிக்கின்றன. 20 – 25 செக்கன்களின் பின்னரோ, ஒழுங்கமைக்கப்பட்ட எதிர்ப்பு ஆரம்பிக்கின்றது. இவற்றிற்காகக் காத்திராமல் கால் களைப் பயன்படுத்தி, பாதுகாப்பான இடத்திற்கு (கணவாய், பள்ளத்தாக்கு, மலையின் மறுபக்கம் போன்றன) வேகமாக ஓடிச்சென்றுவிடவேண்டும். பின்வாங்கல் பாதைகள் முன்னரேயே நியமிக்கப்பட்டிருப்பதுடன். பயிற்சி செய்யப்பட்டும் இருக்கவேண்டும். ஒரு இயந்திரச் சுடுகலனாளன் பக்கவாட்டாகப் பாதுகாப்பான தூரத்தில் (எகேர்களின் நிலையிலிருந்து 200 மீற்றர் தொலைவில்) இருந்தவாறு சிறப்பணி பின்வாங்குவதற்கு காப்பளிக்கின்றான். பின்வாங்குகின்ற அணியின் காலடிச் சத்தம் கேட்காதவாறு சுட்டுக்கொண்டிருப்பதுடன், பின்னர் தானும் பின்வாங்குகின்றான்.

பழைய வழிநடத்தல் கையேடுகளில் ஏன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்?
சிறப்பணியில் குறைந்தது ஒரு காயமடைந்தவனேனும் உருவாவதை அனுமதிக்கக்கூடாது. இதன் அர்த்தம் யாதெனில், உண்மையில் கடமை நிறைவேற்றப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது என்பதாகும். எகேர்களைப் பொறுத்தவரையில் காயமடைந்தவன் இவ்வாறான சுமையே. அனைவருக்கும் சமர்ப் பாதையில் மிகவும் பொறுத்துக்கொள்ள முடியாத விடயம் பட்டினி, வெடிபொருட்கள் இன்மை அல்ல. மாறாக அணியில் காயமடைந்தவன் இருப்பது தான். கெரில்லா வாழ்வில் இது பொறுத்துக்கொள்ள முடியாத துன்பமாகும். குறைந்த தரத்தைக்கொண்ட நூல்களில் தான் காயமடைந்தவர்கள் கொல்லப் படுகின்றனர். உண்மையான நிலைமைகளில் கடைசிச் சாத்தியப்பாடுவரை அவர்களைக் காவிச்செல்கின்றனர்.

எகேர்களின் புயலையொத்த சூடுகளின் பின் கெரில்லாத் தொடரணி பக்கங்களுக்கு ஊர்ந்து செல்லத் தொடங்குகின்ற நேரத்தில், தயாராக வைக்கப்பட்ட பொறிவெடிகளுக்குள் அகப்பட்டுக்கொள்கின்றது. காய மடைந்தவர்களாலும் இறந்த வர்களாலும் நெருக்கடி நிலைக்கு உள்ளான ஆரம்பச் செயற்பாட்டையும் நேரத்தையும் தொலைத்த முன்னே என்ன நடைபெறப்போகின்றதென்பதை விளங்கிக்கொள்ளாத கெரில்லாக்கள் தீர்க்கமான செயற்பாட்டுக்குச் சாத்தியமற்றவர்களாக ஆகிவிடு கின்றார்கள்.

காட்டில் தந்திரோபாயச் சிறப்பம்சங்களால் தோற்றம் பெறுகின்ற காரணிகளிலிருந்து சிறப்புக் குழுக்கள் வேகமாக அறுத்துக்கொண்டு சென்றுவிடவேண்டும். கூடியளவில் காட்டில் இருக்கின்ற மறைப்புக்களைப் (மரங்களைப்) பயன்படுத்தி. குறைந்த எண்ணிக்கையிலுள்ளவர்களை மிக இலகுவாகச் சுற்றிவளைத்துக் கொள்ளலாம். ஆகவே தான் சரியாகத் தெரிந்து வைத்திருக்கின்ற கெரில்லாக் கட்டளையாளன் சுற்றிச்சென்று எகேர்களை முற்றுகையிடுவதற்கான கட்டளையைப் பிறப்பிக்கின்றான். சடுதியாக அமைதி தோன்றி. கிட்டத்தட்ட சூடுகள் நிறுத்தப்பட்டிருக்குமானால் - இவை அவ்வாறான கட்டளை பிறப்பிக்கப்பட்டுவிட்டன என்பதற்கான உறுதியான அறிகுறியாகும். உண்மையில் கெரில்லாக்களின் கட்டளையாளன் அனுபவமிக்க நிபுணனாக இருப்பானானால் அவர்களது செயற்பாட்டிற்குத் திசை திருப்பல் நடவடிக்கையாக இயந்திரச் சுடுகலன் சூடுகள் காணப்படும். காட்டில் மட்டுப்படுத்தப்பட்ட அவதானிப்புத் தன்மை இருப்பதனால் சுற்றிவளைக்கப்படுபவர்களுக்கு இந்நிலை கட்டுப்படுத்தலுக்கும் இனங்கண்டுகொள்வதற்கும் மிகவும் கடினமாக இருக்கும். சூட்டை மேற்கொள்பவர்களுக்கோ கடினம் இரட்டிப்பாக இருக்கும். முதுகுக்குப் பின்னால் இரண்டு பக்கங்களாலும் சிறப்புக் குழு முற்றுகைக்குள்ளாக் கப்படுமானால் எகேர்களுக்கு மிகவும் நெருக்கடியாக இருக்கும். அவர்களைக் காப்பாற்றக்கூடியது வேகமாக மறைந்துபோதலாகும். ஆகவே தான் சிறப்பணியின் ஆளணி எவரும் தவறவிடப்படாமலும் இழக்கப்படாமலும் இருப்பதற்காக மூத்த பொறுப்பாளனால் மூன்று உபகுழுக்களாகப் பிரிக்கப் படுகின்றது. எவ்வாறாயினும் எதிரி யால் கலைக்கப்படும் சந்தர்ப்பம் தோன்றுமானால் (இவ்வாறு நடந்துள்ளது) எகேர்கள் திசைதிருப்பல் சமரைத் தொடர்கின்றனர். அதாவது மூன்று பேர் சுட்டுக்கொண்டு ஓடிக்கொண்டிருக்க ஏனையோர் வசதியான இடத்தில் பதுங்கித் தாக்குதலை ஒழுங்குபடுத்தி, பின்தொடர்ந்து செல்கின்ற எதிரிக்குப் பக்கவாட்டிலிருந்து தாக்குகின்றனர்.

**தொடர்வான்....**



எடுக்குமாறு, பொறுப்புவாய்ந்த அனைத்துத் தரப்பினருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் பணிப்புரை விடுத்துள்ளார். நிலவுகின்ற மின்வெட்டு மற்றும் எரிபொருள் நெருக்கடி தொடர்பில் கடந்த (02) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை விடுத்தார். மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சுகளின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற நீண்ட கலந்துரையாடலின் பின்னர், தாமதமின்றி எரிபொருளை இறக்குமதி செய்தல், கையிருப்பை தொடர்ச்சியாகப் பேணல் மற்றும் மின் உற்பத்திக்கான எரிபொருள் மற்றும் நிலக்கரியை தொடர்ச்சியாக வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இந்நிலையில், மார்ச் 05ஆம் திகதி முதல் மின்வெட்டு இடம்பெறாது என அதிகாரிகள் இதன்போது குறிப்பிட்டுள்ளனர். நாடளாவிய ரீதியில் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும், கடந்த (03) முதல் எரிபொருள் விநியோகம் வழமை போன்று இடம்பெறும். எனவே,

ஒன்றிற்கு செல்லவேண்டிய நிலைக்கு மக்கள் வந்துள்ளனர். அத்தியாவசியமற்ற 600 இறக்குமதிகளை இடைநிறுத்துவதற்கான அதிவிசேட வர்த்தமானியை அரசாங்கம் வெளியிட்டுள்ளது. கோட்டேயில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது, மேலும் உரையாற்றிய அவர், இலங்கை தமது முன்னுரிமைகளை அடையாளம் காண்பதில் சிக்கலை எதிர்கொள்கிறது. வெளிநாட்டு கையிருப்பு குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில், முறையே மருந்துகள், எரிபொருள் மற்றும் கைத்தொழில் மூலப்பொருட்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். அதனைவிடுத்து, அத்தியாவசியமற்ற இறக்குமதிக்கு அனுமதித்ததன் விளைவுகளையே இலங்கை தற்போது அனுபவித்து வருவதாக தெரிவித்தார். நாட்டிற்கு அத்தியாவசியமற்ற 600 இறக்குமதிகளை நிறுத்தும் வர்த்தமானியை வெளியிட திறைசேரி செயலாளர்

# எரிபொருள் தட்டுப்பாடும், மின்வெட்டும் அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுகின்றதா?

நாடு முழுவதும் வேகமாகப் பரவியிருக்கும் கொவிட் தொற்றும் அதன் திரிபுகளின் காரணமாகவும் இலங்கை முழுவதும் மாத்திரமல்ல, உலகமெங்கிலும் இருக்கக்கூடிய நாடுகள் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்துள்ளன. இந்த வைரசினுடைய தாக்கம் இன்னமும் முழுமையாக வீழ்ச்சியடையவில்லை. இந்த அசாதாரண சூழலுக்கு மத்தியில் இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி என்பது கடந்த காலத்தை விட அதளபாதாளம் நோக்கிச் சென்றிருக்கிறது. இதற்கு தற்போது ஆட்சியில் இருக்கும் அரசு மாத்திரமல்ல கடந்த கால அரசுகளும் தான் காரணம் என்கின்றனர் அவதானிகள்.

திடீரென ஏற்பட்ட கொவிட் வைரசினால் தான் நாடு முடங்கியது. நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவுகள் எனப் பிறப்பிக்கப்பட்டு நாட்டின் அனைத்துத் துறைகளும் முடக்கப்பட்டதனால் நாட்டின் உற்பத்திக்கும் பாதிப்பு ஏற்பட்டது. பதவியேற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு செய்வதறியாது சர்வதேச நாடுகளிடம் கையேந்தும் நிலைக்கு வந்துள்ளது. உள்நாட்டில் ஏற்றுமதி முற்றாகப் பாதிக்கப்பட்டது. இறக்குமதி செய்ய முடியாத அளவிற்கு டொலரின் கையிருப்பு குறைவடைந்துள்ளது என அரச தரப்பினரே உத்தியோகபூர்வமாக அறிவித்தனர். இலங்கை மத்திய வங்கியும், ஜனாதிபதியும் நாட்டின் நிலைமை குறித்து ஓரளவு கருத்துக்களைக் கூறிவருகின்ற போதிலும், தற்போது நாட்டில் என்ன நடக்கின்றது என்கிற ஒரு தெளிவான பதிலை நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி அறிவிக்கவில்லை என்கிற விமர்சனம் நாட்டில் எழுந்துள்ளது.

இன்று மக்கள் அத்தியாவசியப் பொருட்களைக் கூட இலகு விலையில் பெற்றுக்கொள்வதற்கு முடியாத துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது. மரக்கறி வகைகள், மருந்துப்பொருட்கள், அரிசி, சீனி, மா என மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்கள் அனைத்தும் விண்ணைத் தொடும் அளவிற்கு விலைகள் உச்சத்தைத் தொட்டிருக்கின்றது. சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சி, ஆடைத்தொழிற்சாலைகளை இயக்க முடியாத நிலை, கைத்தொழில்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு, கடந்த கால அரசுகள் ஏற்கனவே பெற்றிருந்த கடன்களை மீளச் செலுத்தவேண்டிய நிர்ப்பந்தம், புதிய அரசு பதவியேற்றதிலிருந்து நாட்டினைக் கொண்டு நடத்த முடியாத நெருக்கடி நிலை, அரசியல் ரீதியான குழப்பங்கள் என தற்போதைய அரசு பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றது. எனினும் தற்போது நாட்டின் அனைத்துத் துறைகளும் இயக்கப்பட்டு வருகின்றபோதிலும் உற்பத்திகளுக்குத் தேவையான பொருட்களுக்குத் தட்டுப்பாடு தொடர்ந்தும் நிலவுகின்றது. அதற்கு தேவையான டொலர் கையிருப்பில் இல்லை என்று பகிரங்கமாகவே அறிவிக்கப்பட்டு, நாட்டில் ஒரு டொலருக்கான பணத்தைக் கூட அதிகரித்துத் தருவதாக இலங்கை மத்திய வங்கி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இந்த நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் இன்று நாட்டில் பயன்பாட்டுக்கான எரிபொருள் இன்மையால் அல்லது தட்டுப்பாட்டால் பாரிய பிரச்சினைகள் உருவெடுத்துள்ளது. அதேபோல் தற்போது நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள மின்சாரத் தடையால் மக்கள் அல்லலுறும் நிலையும் உருவாகியுள்ளது. இன்றைய உலகின் பேசுபொருளாக மாறியிருக்கும் ரஷ்யா - உக்ரைன் மோதலைத் தொடர்ந்து, சர்வதேச சந்தையில் ப்ரெண்ட் ரக மசகு எண்ணெய் விலை தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது. அதற்கமைய, கடந்த 03ஆம் திகதி ப்ரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 116 அமெரிக்க டொலராக உயர்வடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. ப்ரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாயொன்றின் விலை 110 டொலராக அதிகரித்து காணப்பட்டது. இந்நிலையில், அதன் விலை 6 டொலர் அதிகரித்து 116 டொலராக உயர்வடைந்துள்ளது. இதேவேளை, கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி மசகு எண்ணெய் பீப்பாயொன்றின் விலை 8.24 டொலர் (8.5%) அதிகரித்து 105.08 டொலராக உயர்வடைந்தது. அதற்கமைவ, சுமார் 7 வருடங்களின் பின்னர், ப்ரெண்ட் ரக மசகு எண்ணெய் விலை 100 டொலரை தாண்டியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிலைமையால் இலங்கையில் எரிபொருளின் விலை முன்னர் இருந்ததை விட பன்மடங்காக அதிகரித்துள்ளது. இன்னும் இவ்வதிகரிப்பு தொடரவே வாய்ப்புள்ளதாக அறிய முடிகின்றது.

மின்சார சபைக்குத் தேவையான எரிபொருளை வழங்காமையே இன்றைய மின்சாரத் தடைக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. தற்போது நாடு ஆங்கில எழுத்தின் மூலமாக வலயங்களாகப் பிரிக்கப்பட்டு மின்தடை பகுதி பகுதியாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் அவ்வப்போது இலங்கைக்கு வரும் எரிபொருளில் இருந்து மின்சார சபைக்கு என பிரித்து அதிகளவில் வழங்கப்பட்டு வருகின்றது. பயன்பாட்டுக்குத் தேவையான எரிபொருள் இல்லாமல் இல்லை எனினும் அதற்குத் தேவையான டொலர்கள் நாட்டில் இன்மையே இப்பிரச்சினைக்குக்காரணம். எரிபொருள்நிரப்பு நிலையங்களில் ஏற்பட்ட பற்றாக்குறையினால் பெற்றோல் மற்றும் டீசலுக்காக வாகனங்கள் பெருமளவில் பாதைகளில் வரிசையாக தரித்து நிற்பதை இன்று காண முடிகின்றது. கடமைக்காகச் செல்லும் மக்களது நேரம் வீணவிரயமாக்கப்படுகின்றது. அவசர தேவைகளுக்காக வெளியில் செல்வதற்கு தாமதம். எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் மக்கள் அதிகளவில் பயன்படுத்திவரும் பேரூந்துகள் நிற்கின்றன. இதனால் மக்களின் அன்றாடப் போக்குவரத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை

பொதுமக்கள் அச்சமடைந்து எரிபொருள் சேமித்து வைப்பதைத் தவிர்க்குமாறும், பொதுமக்களிடம் அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்திருந்தனர். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர்களான காமினி லொக்குகே, உதய கம்மன்பில, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, மஹிந்தானந்த அளுத்கமகே, ரமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர, மத்திய வங்கியின் ஆளுநர், ஜனாதிபதியின் செயலாளர், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர், துறைசார் அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளின் செயலாளர்கள், நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தனர் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதேவேளை தொடருந்து சேவைக்கான எரிபொருளில் எவ்வித பற்றாக்குறையும் இல்லை என தொடருந்து திணைக்களம் தெரிவித்துள்ளது. கொலன்னாவ எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து தடையின்றி எரிபொருள் கிடைத்து வருவதாக அத்திணைக்களம் தெரிவித்துள்ளது. உரிய கட்டணம் செலுத்தப்பட்டு எரிபொருள் கப்பல் ஒன்றில் இருந்து எரிபொருள் தரையிறக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல இதனைத் தெரிவித்திருந்ததுடன், இதேவேளை, குறித்த கப்பலில் இருந்து இறக்குமதி செய்யப்படவுள்ள டீசலில் 8,000 மெட்ரிக் டன் இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்திருந்தார்.

500 மில்லிகிராம் எடையுள்ள பெரசிட்டமோல் மாத்திரையின் அதிகபட்ச சில்லறை விலை 2 ரூபா 30 சதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் இந்த நிர்ணய விலை அறிவிக்கப்பட்டுள்ளது. பெப்ரவரி 28ஆம் திகதிமுதல் இந்த கட்டுப்பாட்டு விலை அமுலாகும் என வர்த்தமானி அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, நாட்டில் எதிர்வரும் 4 வாரங்களுக்கு பின்னர் பெருமளவான மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என இலங்கை ஔடத ஒன்றியத்தின் தலைவர் ஏ.ஜே.பஸ்நாயக்க தெரிவித்துள்ளார். நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக மருந்து பொருட்களை இறக்குமதி செய்வதற்கான நாணய கடிதங்கள் விடுவிக்கப்படாமையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போது நாடு முழுவதும் உள்ள மருந்தகங்களில் பெரசிட்டமோல் உள்ளிட்ட சில மருந்துகளுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு தொடர்ச்சியாக அதிகரிப்பிற்குள்ளாகிவரும் அத்தியாவசியப் பொருட்கள், சமையல் எரிவாயுவிற்குக் கூட பாரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது. 24 மணிநேரமும் வேலை

தயாராகியுள்ளதாகவும், ஆனால் அது மிகவும் கால தாமதம் ஆகிவிட்டது. ஆனால் அந்த முடிவு குறித்து நாம் மகிழ்ச்சியடையலாம் என முன்னாள் அமைச்சர் கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை இவ் இழுபறி நிலைக்கு தற்போதைய அரசு மாத்திரம் முழுமையான பொறுப்பல்ல. கடந்த கால அரசுகளின் முறையற்ற திட்டங்கள் இந்நாட்டில் பெருகிப்போயுள்ளது. கடந்த காலத்தில் பெற்ற கடன்களை வட்டியும் முதலுமாக திருப்பிச் செலுத்தவேண்டிய நிர்ப்பந்தம் தற்போதைய அரசுக்கு ஏற்பட்டுள்ளது. கப்பல் வராத துறைமுகம், விமானம் வராத விமான நிலையம், வானுயர்ந்த கட்டடங்களுக்காக பல தொகைப் பணம் கடனாக வெளிநாடுகளிடமிருந்து முறையற்ற விதத்தில் பெறப்பட்டுள்ளது.

தற்போது அந்தத் திட்டங்களால் எதுவித வருமானத்தையும் ஈட்டக்கூடியதாக இல்லை என்பது நிதர்சனமான உண்மை. அபிவிருத்தி செய்யப்படவேண்டிய முக்கிய விடயங்களில் கவனம் செலுத்தப்படாமல் போனமைதான் நாட்டின் பொருளாதாரத் துறையின் இன்றைய வீழ்ச்சிக்கு முக்கிய காரணம். அரசியல் குழப்பங்களால் பொருளாதார வளர்ச்சிக்கான கொள்கையினை தொடர்ச்சியாக நிலையாகப் பேண முடியாத இழுபறி நிலை இந்நாட்டில் உருவாகியுள்ளது. இன்னமும் தீர்க்கப்படாத தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பில் பேசாது, நாட்டின் உயர் தரப்பினர் நல்லிணக்கம் குறித்து தொடர்ச்சியாகப் பேசுகின்றனர். ஆனால் அதற்கான வேலைத்திட்டங்களை செய்வதற்கு ஆட்கள் இல்லை.

இந்நாடு வெறுமனே ஆடை உற்பத்தியினையும், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும்நம்பியிருக்கவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. இந்நாட்டிலும் கைத்தொழில் ரீதியான மாற்றங்கள், தொழில்நுட்ப ரீதியான மாற்றங்கள் சர்வதேச தரத்திலான கற்கை நெறிகள் மற்றும் பயிற்சிகளுக்காக இந்நாட்டின் இளைஞர்களுக்கான போதிய வாய்ப்புக்கள் அல்லது பணம் செலவிடப்படுவதில்லை. வெளிநாடுகளில் சென்று மாணவர்கள் கல்வி கற்று அந்நாடுகளிலேயே தங்கியிருந்து தொழில் செய்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டின் விவசாயம், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைகள், மரக்கறி உற்பத்திகள் இன்று பாரிய வீழ்ச்சியினைக் கண்டுள்ளது. அதுவும் கொவிட் பரவல் நிலைமையின் பின்னரான காலம் மக்களுக்கு பெரும் இன்னல்களைத் தந்துகொண்டிருக்கிறது. திடீரென அரசின் கொள்கையில் ஏற்பட்ட மாற்றமொன்றின் காரணமாக, இப் பயிர்ச்செய்கைகளுக்குத் தேவையான உரத்திற்கு விதிக்கப்பட்ட தடையின் நிமித்தம் உற்பத்தியாளர்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

11ஆம் பக்கம் பார்க்க...

சசிகரன்

# காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டமும், பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிரான கையெழுத்து வேட்டையும்

இலங்கையில் தன்னாட்சி உரிமை கோரி சுமார் 30 வருடங்களுக்கு மேலாக தமிழினம் அஹிம்சை ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் போராடி வந்த நிலையில் 2009 ஆம் ஆண்டு பன்னாட்டு உதவியுடன் இலங்கை அரசு விடுதலைப் புலிகளையும் மக்களையும் முள்ளிவாய்க்கால் மண்ணில் தன்னாட்சி உரிமை என்ற தமிழர்களின் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தனர். இக் கோர யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான அப்பாவி பொதுமக்கள் பலியானதுடன் பலர் அங்கவீனர்களாயினர்.



யுத்தம் முடிவுற்ற கையோடு விடுதலைப்புலிகள் அமைப்பில் போராடியவர்கள், அவர்களுக்கு உதவி செய்தவர்கள் போராட்டத்துடன் தொடர்புபட்டவர்கள் என அனைவரையும் சரணடையுமாறு கோரப்பட்ட நிலையில் போராளிகள் மற்றும் தமது பிள்ளைகளையும் படையினரிடம் ஒப்படைத்தனர். ஒப்படைக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்கு இதுவரை என்ன நடந்தது?. அவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா? அல்லது இறந்துவிட்டார்களா? என்ற எதுவித நிலையும் அறியமுடியாமல் கையறு நிலையில் அந்த பிள்ளைகளை தேடி பெற்றோர்கள் அலைந்து திரிகின்றனர்.

2016 முதல் இராணுவத்திடம் கையளித்த தமது பிள்ளைகளை தருமாறு கோரி சுழற்சி முறை உண்ணா நோன்பு போராட்டத்தை ஆரம்பித்தனர். வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் என அனைத்து மாவட்டங்களிலும் கொட்டில் அமைத்து தமது உறவுகளை தேடி போராடி வருகின்றனர். 5 வருடங்களை கடந்து அவர்களின் போராட்டங்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளது. ஆனால் இதுவரை எதுவித முன்னேற்றமும், அத்துடன் அரசிடம் இருந்து எதுவித பதிலும் இதுவரை கிடைக்கவில்லை. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடி அலையும் பெற்றோர்கள், உறவுகள் தமது பிள்ளைகளை தேடிய நிலையில் இதில் பலர் நோய் வாய்ப்பட்டு உயிரிழந்து விட்டார்கள். அரசு இது தொடர்பாக எதுவித ஆக்கபூர்வமான செயல்பாட்டிலும் ஈடுபடவில்லை. இது தொடர்பாக பல ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் எதுவித பிரயோசனமும் இல்லை. தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்ட விடயங்களில் 2009யுத்தம் முடிவுற்ற காலத்தில் மட்டும் இடம்பெறவில்லை. இந்த தன்னாட்சி உரிமை போராட்டம் ஆரம்பித்த காலம் தொடக்கம் பல அப்பாவி தமிழர்கள் காணாமல் போன வரலாறுகள் உள்ளன. 1978 இல் நடந்த தேர்தலில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஜே.ஆர்.ஜெயவர்தன அவர்கள் 1980ஆம் ஆண்டுக்கு பின்னர் தமிழர்களின் தன்னாட்சி உரிமை கோரி போராடிய போராட்டம் வலுப்பெறத்தொடங்கிய நிலையில் ஜே.ஆர் அவர்களால் பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

அத்துடன் இச்சட்டம் மூலம் அரசுக்கெதிராக போராட்டம் செய்பவர்களை கண்ட இடத்தில் சுட்டுக்கொல்லும் அதிகாரம் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டது. அத்துடன் இது சம்பந்தமானவர்களை கைது செய்து விசாரணை இன்றி இக்காலங்களில் புகழ்பூத்த சிறைச்சாலைகளான பூசா, வெலிக்கட, மெகசின் போன்ற சிறைச்சாலைகளில் ஆயுள் முடியும் வரை சிறை வைக்கப்பட்டிருந்தனர். பலர் சிறைச்சாலைகளில் கலவரங்கள் மூலம் திட்டமிட்டும் படுகொலை செய்யப்பட்டனர். 1983ஆம் ஆண்டு இடம்பெற்ற திட்டமிட்ட இனக்கலவரத்தில் பல அப்பாவிகள் காணாமல் போயினர். யாழ்ப்பாணம் பகுதிகளில் இருந்து வெளிநாடு செல்ல தொழில் நிமித்தம் மற்றும் கல்வி சம்பந்தமாக கொழும்பு சென்றவர்கள் அக்கலவரத்தில் காணாமல் போயினர். அவர்கள் எதுவித தகவலும் இல்லை அவர்கள் உயிரிழந்தார்களா? அல்லது எங்காவது சிறைவைக்கப்பட்டார்களா? எனத் தெரியாமல் அக்காலகட்டங்களில் யாழ்ப்பாணத்தில் பலர் தேடி அலைந்த காலமும் உண்டு. காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு 1993 ஆம் ஆண்டு அதாவது 10 வருடம் கழித்து மரணச்சான்றிதழ்கள் அரசால் வழங்கப்பட்டு காணாமல் போன குடும்பத்தினருக்கு 50 ஆயிரம் இழப்பீடு வழங்கப்பட்டது. 1987 ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படை வடகிழக்கில் நிலை கொண்டிருந்த பொழுது யாழ் மாவட்டத்தில் மற்றும் வன்னிப் பகுதிகளில், கிழக்கு மாகாணங்களில் இந்தியப் படையினருடன் அக் காலத்தில் இணைந்து செயல்பட்ட அரச கைக்கூலிகள், அவர்களுக்கு உதவி செய்தவர்கள் தமது சுயநல இலாபத்துக்கு இந்தியா இராணுவத்திடம் விசுவாசத்தை காட்டுவதற்கும் பலரை பலவந்தமாக பிடித்து இந்திய இராணுவத்திடம் ஒப்படைத்தனர். இதில் பலர் காணாமல் போய் உள்ளனர். விசாரித்துவிட்டு விட்டுவிடுவதாக கூறி வீடுகளில் இருந்து அழைத்து செல்லப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. கைது செய்யப்பட்டவர்களை அக்காலத்தில் இந்திய இராணுவ முகாம்களை நோக்கி தேடியலைந்த சம்பவங்கள் பல அரங்கேறி இருக்கின்றன.

இவ்வாறு இந்தியா இராணுவத்திடம் இப்படி பல அப்பாவி பிள்ளைகளை பிடித்து கொடுத்த தரப்பினர் இன்று காணாமல் போனவர்களை தேடியலையும் பெற்றோர்களுக்கு குரல் கொடுப்பதானது விசித்திரமான கோமாளித்தனமாக உள்ளது. 1995க்குப் பின்னர் யாழ்ப்பாணம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பின்னர் தீவுப் பகுதிகளில் பல அப்பாவிப் பொது மக்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். அத்துடன் பலர் படுகொலை செய்யப்பட்ட வரலாறுகளும் உள்ளன. 1991 தொடக்கம் 2001ஆம் ஆண்டு வரை வவுனியா மாவட்டத்தில் பலர் காணாமல் ஆக்கப்பட்டதுடன் பலர் கைது செய்யப்பட்டு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டும் உள்ளனர். இவ்வாறு காணாமல் போனவர்களை தேடி பலர் அலைந்து திரிந்த வரலாறுகளும் உள்ளன.

இன்று காணாமல் போனவர்களை தேடியலையும் பெற்றோர்கள். ஐ.நா நீதி வழங்கும், அமெரிக்கா நீதி வழங்கும், இந்தியா நீதி வழங்கும், பிரிட்டன் நீதி வழங்கும் என எதிர்பார்த்து காத்திருப்பது பயனற்றது. இவ்வாறு ஒவ்வொரு வருடமும் ஐ.நா கூட்டத்தொடர் இடம்பெறுகின்றது. ஆனால் இதுவரை எதுவித முன்னேற்றகரமான செயல்பாடுகளும் இடம்பெற்றதாக தெரியவில்லை. அத்துடன் உண்மையான மக்கள் புரிந்து கொள்ள வேண்டிய ஓர் விடயம் உள்ளது. ஐ.நா கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராகவோ அல்லது படையினருக்கு எதிராகவோ ஏதாவது தீர்மானம் கொண்டு வந்தால் வீற்றோ பவர் உள்ள நாடுகளை தனது பக்கம் வைத்துள்ள இலங்கை அரசு அதன் மூலமாக தனக்கு எதிராக வரும் தீர்மானங்களை நீக்க முடியும்.

குறிப்பாக ரஷ்யா, சீனா, பிரிட்டன் போன்ற நாடுகள் தற்பொழுது இலங்கை பக்கம் உள்ளது. ஆகவே இதன் மூலம் தனக்கு வரும் அழுத்தங்களை அது குறைக்க முடியும் அத்துடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான முடிவை அரசு தனது மௌனக் கலைப்பின் ஊடாகவே நிறைவேற்ற முடியும். அரசு மட்டுமே இதற்கான தீர்வை வழங்க முடியும். அத்துடன் இவ்வாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடியலையும் உறவுகள் தமக்குள் ஒற்றுமை இல்லாமல் ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குழுக்களுக்கு இடையில் முரண்பாடுகளும் போட்டிகளும் நிலவுகின்றன. இவை களையப்பட்டு ஒற்றுமை நிலைநாட்டப்படவேண்டும்.

இது அவர்களுக்குள் உள்ள முரண்பாடுகளா அல்லது வெளியில் இருந்து செயல்படுபவர்களின் திட்டமிட்ட செயல்பாடா என்று புரியவில்லை. ஒன்று மட்டும் விளங்குகின்றது இவ்வாறு தமது உறவுகளை தொலைத்துவிட்டு தேடியலையும் அப்பாவி உறவுகளை சிலர் தமது சுயநல இலாபத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு முடிவு ஒன்று கட்டாயம் தேவை அதில் மாற்றுக்கருத்து இல்லை. இதில் யார் குற்றம் புரிந்து இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. ஆனால் இவ்வாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டமானது ஓர் காத்திரமான முறையிலும் அல்லது அரசுக்கு மிக அழுத்தம் கொடுக்கும் முறையில் இடம்பெறவில்லை. தமது உறவுகளையும் தொலைத்துவிட்டு தாமும் இவ்வாறு கொட்டில்களில் முடங்கி தமது வாழ்க்கையையும் இவ்வாறு முடித்துக்கொண்டு செல்வது ஏற்கத்தக்கது அல்ல. ஆகவே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடியலையும் பெற்றோர்களுக்கு சரியான முடிவை கொடுக்கவேண்டிய தருணம் இது.

இவ்வாறான நிலையில் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக்கோரி வடகிழக்கு முழுவதும் கையெழுத்து வேட்டை இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. ஐ.நா கூட்டத்தொடர் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இவ் வேளையில் இவ்வாறான கையெழுத்து வேட்டை இடம்பெறுகின்றது. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா முதல் பல தலைவர்களும், பல சிங்கள முஸ்லிம் மக்களும் முன்வந்து பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிராக கையெழுத்து இட்டுள்ளனர். இதில் வேடிக்கையான விடயம் யாதெனில் சந்திரிக்கா அவர்கள் ஜனாதிபதியாக இருந்த பொழுது பயங்கரவாத தடைச்சட்டம் அமுலில் இருந்தது குறிப்பிடத்தக்கது. இவ் கையெழுத்து விடயத்தில் உண்மையில் தற்பொழுது சரியான திசையில் செல்வது புலப்படுகின்றது. அதாவது மூவின மக்களையும் இணைத்துக்கொண்டு பயணிப்பது ஓர் நல்ல விடயமாக தோன்றுகின்றது. தமிழர்கள் தமது பிரச்சினையை சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்துவதன் ஊடாக அவர்களின் அழுத்தங்கள் ஊடாக எமக்கான தீர்வை பெற முடியும். தொடர்ச்சியாக இனப் பகைமையை வளர்த்து செல்வதில் எதுவித பயனும் ஏற்படப்போவதில்லை. அரசுக்கான அழுத்தத்தை சிங்கள மக்களை தெளிவுபடுத்துவதன் ஊடாக கொடுக்க முடியும்.

மேலும் தமிழர்களின் தீர்வுக்கு தமிழ் பரப்பில் உள்ள அனைத்து தமிழ் தரப்பு தலைமைகளும் ஓரணியில் இணைந்து செயல்படுவது காலத்தின் அவசியமாகும். அந்த கட்சி தீர்வை பெற்றுக் கொடுத்துவிடுமோ அல்லது இந்தக் கட்சி தீர்வை பெற்றுக்கொடுத்து விடுமோ என்ற போட்டியில் இவ்வாறு ஒருவரையொருவர் முட்டி மோதிக் கொண்டு இருக்காமல் ஓரணியில் நின்று தமது காழ்ப்புணர்ச்சிகளை மறந்து இனியாவது ஓர் தீர்வை தமிழர்களுக்கு பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டுமே தவிர, சில்லறைதனமான அரசியலை இனியும் செய்வார்களேயானால் வருங்கால சந்ததி அல்ல தற்பொழுது உள்ள சந்ததியே இவர்களுக்கு சரியான தீர்ப்பை வழங்கும். தமிழர்களே உங்களின் தலைவிதியை நீங்களே தீர்மானியுங்கள்.

**தாயகத்தான்**

# அமெரிக்காவின் இராஜதந்திர அரசியல் – உலகப் போராக மாறும் அபாயம்





இன்று உலகளவில் கொவிட் வைரசின் தாக்கத்தினால் அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடையாத நாடுகள் பொருளாதார ரீதியாகத் தடுமாறிவரும் நிலையிலும், அனைவரதும் கவனத்தை ஈர்த்த விடயமாக இன்று ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளுக்கிடையிலான யுத்தம் பார்க்கப்படுகிறது.

கருங்கடல், கஸ்பியன் கடல், இரண்டுக்கும் நடுவே இருக்கிற காகசஸ் மலைப்பகுதி. இந்த மூன்றும் தான் உக்ரைன் போர் மூண்டதற்கான முக்கியமான மூன்று காரணிகள் என்கிறார்கள் ஆய்வாளர்கள். சோவியத் ரஷ்யாவிலே இருந்து பிரிந்த பல நாடுகளில் எத்தனையோ நாடுகள் ரஷ்யாவுக்கு எதிரானதாக மாறியிருந்தாலும் அதைப்பற்றி ரஷ்யா கவலைப்படவில்லை. ஆனால் சோவியத்தில் இருந்து பிரிந்த பெலாரஸ் மற்றும் உக்ரைன் இந்த இரண்டு நாடுகளும் ரஷ்யாவுக்கு வேண்டப்பட்ட நாடுகள்.

உக்ரைனை ரஷ்யாவுக்கு எதிராக திருப்பிவிட அமெரிக்கா எடுத்த முயற்சிதான் இன்று உச்சக்கட்ட எரிச்சலை ரஷ்யாவுக்கு ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது. அத்துடன் உக்ரைன் நாடு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் கைகோர்த்தால் அது தனது நாட்டின் பாதுகாப்பிற்கும் ஏனைய செயற்பாடுகளுக்கும் இடையூறாக அமைந்துவிடும் என ரஷ்யா நினைக்கிறது. அமெரிக்கா - ரஷ்யா மோதல் போக்கு இன்று நேற்று ஏற்பட்டதொன்றல்ல. எனினும் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ரஷ்யாவுடன் நெருக்கமாக செயற்படுபவர் என அப்போதே செய்திகள் வெளிவந்தவண்ணமிருந்தன. இன்று உக்ரைனுக்குச் சொந்தமான கிரிமியா பகுதியை ரஷ்யா அவசர அவசரமாக கைப்பற்றி தனதாக்கிக் கொண்டுள்ளது.

இதேவேளைபலநாட்களாகத் தொடரும் இந்த யுத்தத்தால் ஐரோப்பிய நாடுகள் மத்தியில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அப்பாவிப் பொதுமக்கள் பெரும் நெருக்கடியினைச் சந்தித்து வருகின்றனர். குழந்தைகள், முதியவர்கள் என உக்ரைனை விட்டுத் தப்பிச்செல்கின்ற காணொளிகள் சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகின்றது. குண்டுத் தாக்குதல்கள் உக்ரைனில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளது குறித்து விவாதிக்க ஐ.நா பொது சபையின் சிறப்பு அவசரக்கூட்டம் தொடங்கியது. முதல் நாளில் பேசிய ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ், ரஷ்யா உடனே போரை நிறுத்தவேண்டும். இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை பாதைக்கு திரும்பவேண்டும் என்று வலியுறுத்தினார். பின்னர் கூட்டத்தில் உறுப்பு நாடுகளின் ஐ.நாவுக்கான பிரதிநிதிகள் பேசினார்கள். 120 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் பேசிய பிறகு, போரை நிறுத்தக் கோரும் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்த திட்டமிடப்பட்டு மாலைக்குள் பொதுச்சபையின் பாதி உறுப்பினர்கள் வாக்கெடுப்புக்கு முன்னதாக ஒரு வரைவு தீர்மானத்தில் கையெழுத்திட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் உக்ரைனுக்கு எதிரான போர் வருத்தம் அளிப்பதாக தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. ஐ.நா. பொதுச் சபையில் உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்துள்ள போருக்கு பெரும்பாலான நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. சில நாடுகள் மட்டுமே ஆதரவு அளித்துள்ளன. ஐ.நா பொதுச் சபையின் தீர்மானம் சட்டபூர்வமாக பிணைக்கப்படவில்லை என்றாலும், அவை சர்வதேச கருத்தை பிரதிபலிப்பதில் செல்வாக்கை பெற்றுள்ளது அவை அரசியல் முக்கியத்துவத்தை பெற்றுள்ளது. என்பது குறிப்பிடத்தக்கது. ஐ.நா. பொதுச்சபையில் எந்த நாட்டுக்கும் வீட்டோ அதிகாரம் கிடையாது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தை ரஷ்யா வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி முறியடித்து இருந்தது. இதேவேளை பாம்புத்தீவில் இடம்பெற்ற சம்பவம் அனைவரதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

இதனிடையே பெலாரஸ் நாட்டின் ஹோமெல் நகரில் ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குஉக்ரைன் சம்மதித்தது. அப்பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிவடைந்திருந்தது. எனினும் உக்ரைன் தலைநகர் கீவ்வை ரஷிய ராணுவ வீரர்கள் முழுமையாக கைப்பற்றும் நோக்கில் தற்போது உக்கிரமான தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதேபோல் மற்றொரு பெரிய நகரமான கார்கிவிலும் தாக்குதல் நடந்து வருகிறது. ரஷ்யாவில் 850000 இராணுவ வீரர்களும், உக்ரைனில் 200000 இராணுவ வீரர்களும் உள்ளதாகவும், ரஷ்யாவில் 250000 துணை இராணுவப் படை வீரர்களும் உக்ரைனில் 50000 வீரர்கள் மட்டுமே உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 605 கடற் படை வீரர்கள் ரஷ்யாவிலும் 38 வீரர்கள் உக்ரைனில் இருப்பதாகவும், 4173 மொத்த விமானங்கள் ரஷ்யா வசம் இருப்பதாகவும் 318 விமானங்கள் உக்ரைனில் இருப்பதாகவும் தக வல்கள் தெரிவிக்கின்றன. 30122 கவச வாகனங்கள் ரஷ்யாவிடம் இருப்பதாகவும், 12303 கவச வாகனங்களையே உக்ரைன் வைத்திருப்பதாகவும், 3391 ரொக்கெட் லோஞ்சர்கள் ரஷ்யா வசமும் 490 லோஞ்சர்கள் மாத்திரமே உக்ரைன் வசம் இருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. எனினும் தற்போது உக்ரைனுக்கு ஆயுத ரீதியான உதவிகளைச் செய்ய பல நாடுகள் முன்வந்திருப்பதாக சர்வதேச செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்நிலையில், கூகுள் மற்றும் பேஸ்புக் ஆகியவை ரஷ்ய ஊடகங்கள் விளம்பரம் மூலம் பணம் சம்பாதிக்க தடை விதித்துள்ளன. இதைத் தொடர்ந்து, ரஷ்ய அரசுக்கு சொந்தமான மற்றும் தனியார் ஊடகங்கள், இணையதளங்கள் மற்றும் யூடியூபில் வீடியோக்களில் இருந்து வரும் அனைத்து முக்கிய விளம்பர வருமானத்தையும் யூடியூப் கடந்த சனிக்கிழமை தடை செய்துள்ளது. எனினும், தொடரும் இந்த சண்டையில் இரு தரப்பிலும் பெரும் உயிரிழப்பும், பொருளாதார இழப்பும் ஏற்பட்டு வருகிறது.

இதனிடையே ரஷ்யா மீது பல்வேறு நாடுகள் பொருளாதார தடைகளை விதித்துள்ளன. பெல் ஜியம், டென்மார்க், அயர்லாந்து மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளும் ரஷ்ய விமானங்களை தங்கள் வான்வெளிக்குள் செல்ல தடை விதித்துள்ளன. இதற்கிடையில், கனடா தனது வான்வெளியில் ரஷ்ய விமானங்களுக்கு தடை விதித்துள்ளது. ஜெர்மனி, அமெ ரிக்கா மற்றும் இத்தாலி என பல நாடுகளில் உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் தாக்குதலைக் கண்டித்து மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் உக்ரைன் தயாரித்த உலகின் மிகப்பெரிய சரக்கு விமானத்தை ரஷ்யா அழித்துள்ளது. ஏ.என்-225 'மிரியா' என்று பெயரிடப்பட்ட அந்த விமானம் ரஷ்யாவின் ஏவுகணை தாக்குதல் மூலம் தகர்க்கப்பட்டு இருக்கிறது. இந்த மோதல்களுக்கு மத்தியில் ஐ.நாவின் 49வது கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில், ஐ.நா பொதுச்சபையின் தலைவர் அப்துல்லா ஷகித் தலைமையில் அவசர சிறப்பு கூட்டம் நடைபெற்றுள்ளது. 27 நாடுகள் அடங்கிய ஐரோப்பிய யூனியனில் இணையும் முயற்சிகளில் உக்ரைன் ஈடுபட்டு வந்தது. இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்திருக்கும் ரஷ்யா, ஐரோப்பிய யூனியனில் இணைவதற்கான விண்ணப்பத்தில் கடந்த திங்கள் கிழமையன்று உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கையெழுத்திட்டார். தொடர்ந்து ஐரோப்பிய பாராளுமன்றத்தில் காணொலி மூலம் அவர் உரையாற்றுகையில், உக்ரைன் மக்கள் வலிமையானவர்கள். நாங்கள் தனித்து விடப்பட்டுள்ளோம். நீங்கள் எங்களோடு இருப்பதை நிரூபியுங்கள். எங்களை போகவிட மாட்டீர்கள் என்பதை நிரூபியுங்கள். நீங்கள் உண்மையிலேயே ஐரோப்பியர்கள் என்பதை நிரூபியுங்கள். அப்போதுதான் மரணத்தை வாழ்க்கை வெல்லும் எனத் தெரிவித்தார். உக்ரைன் ஜனாதிபதியின் இந்த உரை முடிந்தவுடன் அங்கிருந்த உறுப்பினர்கள் கைதட்டி பலத்த கரகோஷம் எழுப்பினர். இதையடுத்து ஐரோப்பிய யூனியனின் உறுப்பு நாடாக உக்ரைனின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக ஐரோப்பிய பாராளுமன்றம் அறிவித்துள்ளது.

உலகின் மிகப்பெரிய விமான தயாரிப்பு நிறுவனமான அமெரிக்காவின் போயிங் நிறுவனம், ரஷ்யாவை சேர்ந்த தங்கள் தொழில் கூட்டாளிகளுடனான உறவை துண்டித்துக்கொண்டுள்ளது. மொஸ் கோவில் தங்கள் நிறுவனத்தின் முக்கிய செயற்பாடுகளை நிறுத்துவதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது. உக்ரைனில் கடு மையாக போர் நடந்துவருவதால் அங்கிருந்து மக்கள் வெளியேறி அண்டை நாடுகளில் தஞ்சம் அடைந்து வருகிறார்கள். போலந்து, ஹங்கேரி, ருமேனியா, சுலோவோக்கியா ஆகிய நாடுகளின் எல்லைகளில் லட்சக்கணக்கானோர் குவிந்து இருக்கிறார்கள். இந்த நிலையில் உக்ரைனில் கடந்த 24ஆம் திகதி போர் தொடங்கியதில் இருந்து 7 நாட்களில் 10 லட்சம் பேர் அகதிகளாக வெளியேறி உள்ளதாக ஐ.நா அகதிகள் அமைப்பு தெரிவித்துள்ளது. அதிகபட்சமாக 4 லட்சம் பேர் போலந்து நாட்டில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

11 ஆம் பக்கம் பார்க்க...

**சுழியோடி**

# இலங்கை பௌத்த பாசிசம்



சென்னை எழும்பூரில் இருக்கிற பௌத்த மகா போதி சங்கத்திற்குச் சென்றிருந்தேன். மடத்தில் நிலவிய ஒழுக்கமும், தூலமான பேரமைதியும் எங்கோ ஒரு சனாதனக் கோட்டைக்குள் நுழைந்துவிட்ட அருவறுப்பைக் கொடுத்தது. மயிலாப்பூரில் இருக்கிற பார்ப்பன மடமான இராமகிருஷ்ணா மடத்திலும் மகா போதி மடத்திலும் உரையும் அமைதியில் எந்த வித்தியாசங்களும் இல்லை. புதுச்சேரியில் உள்ள அரவிந்தர் ஆசிரமம், மகாபோதி சங்கம், மயிலாப்பூர் மடம் என்று அவர்களின் தோற்றத்திலும் நடை உடை பாவனையிலும் வித்தியாசங்களில்லை. ஒரே ஒரு வித்தியாசத்தைத் தவிர அவர்களிடம் பூணூல் உண்டு. இவர்களிடம் பூணூல் இல்லை அவளவுதான். மற்றபடி மடத்தில் இருக்கும் பிக்குகள் மிகவும் இளைய வயதுள்ளவர்கள். இலங்கை அரசுக்கும் மகா போதி சங்கத்திற்கும் நேரடி உறவு உண்டு. இலங்கைத் தூதரகத்தின் ஒரு உளவு அமைப்பாக பௌத்த முகமூடியோடு செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஆரிய சிங்கள அமைப்புதான் மகா போதி சங்கம்.

இடது வலது பக்கங்களில் அலங்கரித்துக் கொண்டிருக்கும் பொருட்களுக்கு மேலே நடு வாசலில் ஒரு மீசை மழித்த ஆசாமி படத்தில் இருக்கிறார். எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதே என்று நினைத்தால், ஆஹா அது அநகாரிக தர்மபாலா ஆரிய இனமான சிங்கள இனத்தின் மேன்மைகளைப் பேசி சிறுபான்மை முஸ்லீம் மக்களுக்கு எதிராகவும், தமிழ் மக்களுக்கு எதிராகவும், மலையாளிகளுக்கு எதிராகவும் இலங்கையில் இயக்கம் கட்டியவர். உலகம் எதிர்கொண்ட கிரேட் டிப்பரஷன் பொருளாதார நெருக்கடியும் இலங்கையின் தேயிலை வீழ்ச்சியும் திண்டாடிய தொழிலாளிவர்க்கத்தின் பிரச்சினைகளுக்கும் காரணமாக சிறுபான்மை மக்களினங்களைக் கைசுட்டி சிங்கள மேனையை நிறுவியவர். இந்திய எதிர்ப்பு (இந்து எதிர்ப்பு) என்பது அநகாரிகவின் அடிப்படையாக இருந்தாலும் அவருக்கு பார்ப்பனர்கள் மீது பாசம் அதிகம் இருந்திருக்க இயல்பான ஒற்றுமையும் இருந்திருக்க வேண்டும். இங்கிருந்து கடல் வழியாக வர்த்தகங்களுக்காக சென்று வரும் இந்திய தொழிலாளர்களை மிலேச்சர்களாகச் சித்தரித்த அநகாரிக, பௌத்த மறுமலர்ச்சி என்னும் பெயரில் சிங்கள பேரினவாதத்தை கட்டி எழுப்பியதில் பெரும் பங்காற்றியவர். ஒரு நன்றிக்கடனுக்காக அந்த கருத்தியலாளரின் படத்தை இங்குள்ள போதி சங்க பிக்குகள் வைத்திருக்கக்கூடும்.

### பெரும்பான்மைவாதம்

பாபர் மசூதி இந்து வெறியர்களால் இடித்துத் தரை மட்டம் ஆக்கப்பட்டது. நாடு முழுக்க சிறுபான்மை முஸ்லீம் மக்களுக்கு எதிரான கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. நூற்றுக்கணக்கான அப்பாவி இந்துக்களும், முஸ்லீம்களும் அந்தக் கலவரங்களில்கொல்லப்பட்டார்கள். இந்தியா மட்டு மல்லாது பாபர் மசூதி இடிப்பு ஆசிய நாடுகள் முழுக்க சிறுபான்மை பெரும்பான்மை கருத்தியலை கட்டவிழ்த்துவிட்டது. வங்கதேசத்தில் முஸ்லீம்கள் பெரும்பான்மையினர் இந்துக்கள் சிறுபான்மையினர். அங்கே சிறுபான்மை இந்துக்கள் துன்புறுத்தப்பட்டனர். அப்படி ஒரு சிறுபான்மை இந்துக் குடும்பத்தின் மன உணர்வை வெளிப்படுத்தி தனது சொந்த சமூகத்திற்குள் ஜனநாயகக் குரலாக ஒலித்தார் தஸ்லிமா நஸ் ரீன். தலிபான்கள், அல்கொய்தா, லக்ஷர் ஈ தொய்பா போன்ற அமைப்புகளோ அல்லது அவர்களின் ஆதரவாளர்களோ கலாசாரப் பாசிஸ்டுகளாக திகழ்கிறார்கள்.

### இலங்கை பௌத்த பாசிசம்

இந்தியாவின் இந்து மத வெறிக்கு சற்றும் குறையாத அல்லது அதை விட அகோரமான ஒரு பாசிச வெறி கொண்ட அரசு மதமாக பௌத்தம் இலங்கையில் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. நிறுவனமயப்பட்ட பௌத்த மதத்தையும், இலங்கை அரசையும், அதன் மேன்மை மிக்க பௌத்த தலதா மாளிகையும், ஏனைய பௌத்த பீடங்களான மல்வத்த, அஸ்கரிய பீடங்களையும் தனித் தனியானவை, அரசுக்கும் இந்த மத நிறுவனங்களுக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை, என்றெல்லாம் வேறுபடுத்தியோ தனித்தனியாகவோ பிரித்துக் காண முடியாது. இந்த மத நிறுவனங்கள் தவிர ஜாதிக ஹெல உருமய வேறு. எப்படி இந்தியாவில் பஜ்ரங்தள், ஆர்.எஸ்.எஸ், விஷ்வ ஹிந்து பரிசத் போன்ற அமைப்புகள் வன்முறை அமைப்புகளாக தீர்மானிக்கும் சக்திகளாக செயல்படும் போது பிஜெபி, சிவசேனா போன்றவை வாக்கு வங்கி அரசியல் தளத்தில் வெகு சன அமைப்பாக செயல்படுகிறதோ அப்படித்தான் ஹெல உறுமயவும்.

பொதுவாக மல்வத்தை, அஸ்கரிய பீடங்கள் ஏதோ ஒரு பிரதான அரசியல் கட்சியின் ஆதரவு அமைப்பாக செயல்பட்டாலும், போரின் முடிவுக்குப் பின்னர் இவர்கள் அனைவருமே இணைந்து செயல்படுகிற போக்கு காணப்படுகிறது. 2009 ஜனவரியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்கள் படையினரிடம் விழுந்தபோது, ஜாதிக ஜெல உறுமய அமைப்பின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் மல்வத்தை பீட மகாநாயக்கத் தேரரையும், திப்பெட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரையும், அஸ்கரிய, பீட தேரரையும் சந்தித்துவிட்டு உற்சாகப் பெருக்குடன் ஊடகவியளார்களுக்கு வழங்கிய நேர்காணலில், ஜனாதிபதியின் சரியான வழிகாட்டலின் கீழும் முப்படைத் தளபதிகளின் தலைமையிலும் எமது இராணுவத்தினர் வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போரிட்டு அனைத்துப் பிரதேசங்களையும் மீட்டு வருகின்றனர். அடுத்த மாத இறுதிக்குள் வடக்கின் அனைத்து பகுதிகளும் எமது படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுவிடும்.

பாரம்பரிய கலாசார பௌத்த தொல்பொருட்களைப் பாதுகாப்பதற்கான பல வேலைத் திட்டங்களை நாம் தயாரிக்க வேண்டியுள்ளது. மகாநாயக்க தேரருடனும் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். தொடர்ந்தும் கிளிநொச்சி புராதன பௌத்த நகராக இருந்தது என்றார். பூம்புகாரும், கொற்கையும், மாமல்லபுரமும், தொண்டியும், மதுரை உள்ளிட்ட தமிழகமே ஒரு காலத்தில் சமணக்காடாக இருந்ததாக வரலாறு சொல்கிறது.

வரலாற்றை மீள கட்டி எழுப்புவதும், தூய்மைப்படுத்தி அதை மேன்மையாக்க நினைப்பதும்தான் பாசிசத்தின் முதல் செயல்பாடு. அது இந்தியாவின் இந்துப் பாசிசத்திற்கும் பொருந்தும், இலங்கையின் பௌத்த பாசிசத்திற்கும் பொருந்தும்.

இடிக்கப்பட்ட இந்து ஆலயங்களை மீண்டும் கட்டி எழுப்பவதினூடாக இந்து மறுமலர்ச்சியை ஏற்படுத்த இங்குள்ள இந்துக்கள் விரும்புவது போல, ஈழத் தமிழர்களின் தாயகமான வடக்குக் கிழக்கில் உள்ள இந்து, முஸ்லீம் ஆலயங்களையும் தொழுகைத் தலங்களையும் அகற்றிவிட்டு அங்கு சந்திக்கு சந்தி விஹாரைகளை நிறுவுவதினூடாக பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்த நினைக்கிறது பௌத்த பாசிசம். இந்து மக்களின் மரபில் சிறு தெய்வ வழிபாடும் தமிழ் மரபுதானே? இந்துக்கள் என்பதாலேயே அவர்கள் கொல்லப்படுவதையும் அவர்களின் வழிபாட்டு தலங்கள் அழிக்கப்படுவதையும் ஆதரிப்பீர்களா?

கடவுள் மறுப்பு என்கிற தத்துவத்தின் கட்டப்பட்ட திராவிட இயக்கம் என்னும் சீர்திருத்த இயக்கம் கடவுள் நம்பிக்கை இல்லை என்றாலும்அதுவழிபாட்டுஉரிமையை ஆதரித்தே வந்திருக்கிறது. சீர்திருத்த வாதியான ஈ.வே.ரா பெரியாரின் தீண்டாமைக்கெதிரான போராட்டம் என்பதே வழிபாட்டு வாழ்வுரிமையின் ஒரு பகுதிதான்.

ஆனால் இன்று தமிழகத்தின் திராவிட இயக்க அறிவு ஜீவித் தளத்தில் ஒரு விதமான பௌத்த மேன்மை நினைவுறுத்தப்படுகிறது. அதாவது மாபெரும் இனக்கொலை ஒன்று பௌத்த மேலாதிக்க சிங்கள அரசுப் பாசிசத்தால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டிருக்கிறது. நேரடியாக சிங்கள அரசையோ அதன் ஒடுக்குமுறையையோ ஆதரிக்க முடியாமல் மிக வசதியாக பௌத்த மரபிற்குள் இவர்கள் ஒழிந்து கொள்கிறார்கள். சரி பௌத்த மரபே இலங்கையின் அரசு பயங்கரவாதத்தின் ஒரு அங்கம்தான் என்றால் அதை ஏன் ஆதரிக்கிறீர்கள் என்றால் அமைதி காக்கிறார்கள். பெரியார், திராவிட இயக்கம் போன்றவைகளின் கடவுள் மறுப்புக் கொள்கையையும் இந்து மத எதிர்ப்பையும் தங்களின் சுயலாப பௌத்த முகமூடிக்காக ஒரு பிராண்டாக பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

ஒரு இடத்தில் பெரும்பான்மையாக வாழும் மக்கள் இன்னொரு இடத்தில் சிறுபான்மையாக வாழும் போது நமது ஆதரவு எப்போதும் சிறுபான்மை மக்களுக்கே அவர்கள் பௌத்தர்களா? தமிழர்களா? இந்துக்களா? என்பதல்ல பிரச்சினை. வரலாறுகளை தகர்த்தெறிந்தவர்கள் தங்களுக்கு வசதியான ஒரு இடத்திற்கு வந்தவுடன் அதை நிறுத்திக் கொண்டதுடன் தோதான ஒன்றையும் போர்த்திக் கொள்கிறார்கள். ஈழப் படுகொலைகளுக்கு பின்னர் எல்லாவிதமான வரலாறுகளையும் நாம் கேள்விக்குள்ளாக்க வேண்டியிருக்கிறது.

சிறுபான்மை மக்கள் ஆதரவு என்பதுமனித நேயத்தின்பால் இருக்க வேண்டும். நமக்கு வேண்டாத மதம் என்பதால் அவர்கள் சாகட்டும் என்பதை ஆதரித்து மௌனமாக இருப்பது போல மனித குலத்திற்கு எதிரானது வேறொன்றும் இல்லை. இலங்கையில் பௌத்த பாசிசம். இந்தியாவில் இந்துப் பாசிசம். மதங்கள் மனிதனுக்கு விடிவைத் தராது என்பதற்கு இது இன்னுமொரு சான்று. தந்திரங்களால் இனி அடுத்த தலைமுறையை ஏமாற்ற முடியாது.

**சுழியோடி**



# பிராந்திய செய்திகள்



## பாடசாலைகளுக்கு பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தினால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பு

(நூருல் ஹுதா உமர்)



இளைஞர் பாராளுமன்ற வெளிவிவகார பிரதியமைச்சர் அஹ்மத் ஸாதிக்ன் வேண்டுகோளுக்கிணங்க பாடசாலைகளுக்கு பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தினால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டது. இளைஞர் பாராளுமன்ற வெளிவிவகார மற்றும் இராஜதந்திர உறவுகளின் பிரதியமைச்சர் அஹ்மத் சாதிக் மற்றும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமத் முப்தி ஆகியோர்களின் வேண்டுகோளிற்கிணங்க களுத்துறை மாவட்டத்தில் உள்ள ஐந்து பாடசாலைகளுக்கு 24 கிரிக்கட் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வானது பாகிஸ்தான் உயர்ஸ்தானி ஜெனரல் உமர் பாரூக் புர்கி அவர்களின் தலைமையில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அவர்களும் விருந்தினர்களாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இயக்குனர்கள் மற்றும் இளைஞர் பாராளுமன்றத்தின் பிரதமர் உட்பட மேலும் பல வெளிவிவகாரம் தொடர்பான அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் இறுதியாக இளைஞர் பாராளுமன்ற வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹ்மத் ஸாதிக் அவர்களின் நன்றி உரையில், எமது வேண்டுகோளினை மதித்து அதற்கேற்ப வாய்ப்பினை எமக்கு வழங்கியமைக்கு பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஜெனரல் உமர் பாரூக் புர்கி அவர்களுக்கும் இரண்டாம் செயலாளர் ஆயிசா அபூபக்கர் அவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு அமைச்சர் நாமல் ராஜபக்ச அவர்களது ஊக்குவிப்பு மற்றும் வழிகாட்டலுக்கும் நன்றியினை தெரிவித்தார்.

## சாதாரண தரத்தில் தேர்ச்சி பெறத் தவறியவர்களுக்கு தொழில் வாய்ப்பு

2020 ஆம் ஆண்டு கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைவாக. உயர்தரத்திற்கு தகுதி பெற தவறிய மாணவர்களை. தொழில் பயிற்சிகளில் ஈடுபடுத்தி தொழிலில் ஈடுபடுத்துவதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் (02) நடைபெற்ற நிகழ்வொன்றில் மனித வள மற்றும் தொழில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுஷா கோகுல இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

2020 ஆம் ஆண்டில் கல்வி பொது தராதர சாதாரண பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில், உயர்தரத்திற்கு தகுதி பெறாதோரின் எண்ணிக்கை 98 ஆயிரத்திற்கும் மேற்பட்டதாகும். இதில் கணித பாடத்தில் சித்தி எய்த தவறியமை இருப்பினும் பின்னர் சித்தி எய்தியமை அடிப்படையில் கல்வி பொது தராதர உயர்தர மாணவர்களை தவிர்ந்த ஏனையவர்களை இலக்காக கொண்டு இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்த வேலைத்திட்டம் 2 கட்டங்களின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ளது. முதலாவது கட்டத்தின் கீழ் தற்போதைய நோக்கத்திற்கு உட்பட்ட மாணவர்களை இலக்காக கொண்டு மேற்கொள்ளப்படுவதாக பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இரண்டாவது கட்டத்தின் கீழ் தொழில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள, இளைஞர் சேவை மற்றும் தேசிய இளைஞர் படையணியில் ஈடுபட்டுள்ள மற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ள மாணவர்களை இலக்காகக்கொண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர்கள். பிரதேச செயலாளர் மட்டத்தில் அடையாளம் காணப்பட்டு அவர்களது திறன் ஆற்றல்களுக்கு அமைவாக தொழில் பயிற்சிகளில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இவர்கள் பிரதேச தொழில் வழிகாட்டி ஆலோசனை அதிகாரிகள் மற்றும் மனிதவள அதிகாரிகளை சந்தித்து தமது தகவல்களை வழங்க முடியும். வேலைத்திட்டம் தொடர்பான தகவல்கள் www.done.gov.lk இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த வேலைத்திட்டத்தில் அனைத்து சேவைகளும் இலவசமாக வழங்கப்படும். மாணவர்களுக்கு ஒரு வருட காலத்திற்குள் NVQ தரத்தை அடைய கூடியதாக இருக்கும் என்றும் பணிப்பாளர் நாயகம் அனுஷா கோகுல தெரிவித்தார். இலங்கை தொழில் வாய்ப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.கே.டபிள்யூ சிசர குமாரவும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.

## காச நோயினால் இதுவரை 47 பேர் மரணம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் காசநோய் காரணமாக 47 பேர் மரணித்துள்ளதாகவும், இக்காலப்பகுதியில் 398 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் மாவட்ட காசநோய் தடுப்பு வைத்தியதிகாரி டாக்டர். கோணேஸ்வரன் ஆரணி தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டு 147 பேர் அனுமதிக்கப்பட்டு 17பேர் மரணித்ததாகவும், 2020 இல் 127 பேர் அனுமதிக்கப்பட்டு 19 பேரும், 2021 இல் 124 பேர் அனுமதிக்கப்பட்டு 11 பேருமாக, 47 பேர் இறந்துள்ளனர்.

உலக காசநோய் தினத்தையொட்டி மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி பணிமனை நடாத்திய காசநோய் விழிப்புணர்வு கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசும்போதே இதனைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் இ.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் பொது சுகாதார பரிசோதகர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

## பல்லின மக்களும் ஒற்றுமையாக பங்குகொண்ட இறக்காமம் பிரதேச கலை இலக்கிய விழா

(நூருல் ஹுதா உமர்)

2021 ஆம் ஆண்டுக்கான இறக்காமம் பிரதேச இலக்கிய விழா. கலாச்சார அதிகார சபையின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளரும் இறக்காமம் கலாசார அதிகார சபையின் தலைவருமான எம்.எஸ்.எம். ரஷ்ஷான் (நளீமி) தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

பிரதேச மட்டத்தில் இடம்பெற்ற கலை இலக்கியப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்கள் மற்றும் திறந்த பிரிவில் வெற்றியீட்டிய கலைஞர்களுக்கான சான்றிதழ்களும் பரிசுப் பொருட்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன. மேலும் இறக்காமம் கலாச்சார அதிகார சபைக்கு பங்காற்றிய கலாச்சார அதிகார சபையின் உப தலைவர் எஸ்.எல். நிஸார் (பிரதி கல்வி பணிப்பாளர்). பொருளாளர் யூ.எல். ஜிப்ரி (ஆசிரியர்) ஆகியோருக்கு விஷேட கௌரவமும் வழங்கி வைக்கப்பட்டது. நிகழ்வில் கலந்துகொண்டு கலை நிகழ்ச்சிகளை வழங்கிய மூத்த கலைஞர் கலாபூசனம் பி.டி. யாசீன்பாவா. ஐ.ஹுஸைன் றிஸ்வி. ஏ.எல். ஹாறூன். ஜனாபா. பர்சானா றியாஸ் ஆகியோரும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

2021 ஆம் ஆண்டுக்கான இறக்காமம் பிரதேச இலக்கிய விழா நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக. சது அமீரலிபுர வித்தியாலய மாணவர்களின் பொல்லடிக் குழுவினுடைய கிராமிய கோலாட்டம் இடம்பெற்றது. மேலும் மாணிக்கமடு கலைமன்றத்தின் தமிழ் பாரம்பரிய நடனமும். எச்.நதீகா குமாரி அவர்களின் பயிற்றுவிப்பில் சிங்கள நடனக் குழுவினர். தங்கள் பாரம்பரிய கலாச்சார கண்டி நடனம் மற்றும் கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றினர்.

கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.நௌபீஸா. கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர் (கிழக்கு மாகாணம்) வசந்தா ரன்ஞனி, முஸ்லிம் சமய கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல்.இப்றாலெப்பை ஆகியோரின் நெறியாழ்கையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீல். கணக்காளர் றிம்ஸியா அர்ஷாட். பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஹம்சார். கிராம நிலைதாரிகளின் நிருவாக உத்தியோகத்தர் எச்.பி.இந்திரசிறி யசரட்ன. மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் டீ.எம். றிம்ஷான் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும். இறக்காமம் கலாச்சார அதிகார சபையின் உப தலைவர் எஸ்.எல். நிஸார் (பிரதி கல்வி பணிப்பாளர்). பொருளாளர் யூ.எல். ஜிப்ரி (ஆசிரியர்). சது-அமீர் அலிபுர வித்தியாலய அதிபர் எஸ். எம்.லாஹிர். சது-ரோயல் கனிஷ்ட கல்லூரி அதிபர் எம்.ஏ. பஜீர் ஆகியோர் உட்பட கலைஞர்கள். இலக்கியவாதிகள் என பலரும் கலந்து கொண்டனர். நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அசாதாரண சூழ்நிலை காரணமாக 2021 ஆம் ஆண்டுக்கான இறக்காமம் பிரதேச இலக்கிய விழாவானது பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மத்திய வங்கி எடுத்துள்ள அவசர தீர்மானம்

நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதத்தை அதிகரிக்க இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இதன்படி, நிலையான வைப்புத்தொகை வசதி 6.5 சதவீதமாகவும், நிலையான கடன் வசதி 7.5 சதவீதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. பொருளாதார நடவடிக்கைகளில் தொடரும் தடைகளை கவனத்தில் கொண்டு நடைபெற்ற மத்திய வங்கியின் நாணய சபை கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.






## மீண்டும் ரஜினி - வடிவேலு கூட்டணி



நடிகர் ரஜினிகாந்தின் 169ஆவது திரைப்படத்தில் நகைச்சுவை நடிகர் வைகைப்புயல் வடிவேலு நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ரஜினிகாந்த் நடித்த அண்ணாத்த படம் தீபாவளி பண்டிகையில் வெளியானது. அடுத்து புதிய படத்தில் நடிக்க பல இயக்குனர்களிடம் கதை கேட்டு வந்தார். நெல்சன் திலீப்குமார் சொன்ன கதை பிடித்ததால் அவரது இயக்கத்தில் ரஜினி நடிக்க இருக்கிறார். இது அவருக்கு 169வது படம். நெல்சன் ஏற்கனவே நயன்தாரா நடித்த கோலமாவு கோகிலா, சிவகார்த்திகேயனின் டொக்டர் படங்களை இயக்கியுள்ளார். தற்போது விஜய் நடித்துள்ள பீஸ்ட் படத்தை இயக்கி முடித்துள்ளார்.

ரஜினிகாந்த் நடிக்கும் 169வது படத்துக்கு அனிருத் இசையமைக்கிறார். அதிரடி குடும்ப கதையம்சம் உள்ள படமாக தயாராவதாக கூறப்படுகிறது. படப்பிடிப்பை ஓகஸ்ட் மாதம் தொடங்கி பொங்கல் பண்டிகையில் திரைக்கு கொண்டுவர திட்டமிட்டுள்ளனர். இந்த படத்தில் நடிக்கும் நடிகர்-நடிகை தேர்வு நடந்து வருகிறது. ரஜினிக்கு ஜோடியாக நடிக்க ஐஸ்வர்யாராய் பெயர் அடிபடுகிறது. ஐஸ்வர்யாராய் ஏற்கனவே எந்திரன் படத்தில் ரஜினியுடன் நடித்து இருந்தார்.

இந்த நிலையில் ரஜினியின் புதிய படத்தில் நகைச்சுவை கதாபாத்திரத்தில் நடிக்க வடிவேலுவிடம் பேசி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. சந்திரமுகி படத்தில் ரஜினி, வடிவேலு நகைச்சுவை காட்சிகள் பேசப்பட்டன. தற்போது மீண்டும் புதிய படத்தில் இவர்கள் இணைய இருப்பதாக கூறப்படுகிறது.

## விக்ரம்: ரிலீஸ் திகதி வெளியீடு

கமல், விஜய் சேதுபதி இணைந்து நடித்துள்ள விக்ரம் படத்தின் ரிலீஸ் திகதி அறிவிக்கப்படவுள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

மாஸ்டர் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் உருவாகி வரும் படம் 'விக்ரம்'. நடிகர் கமல்ஹாசன் ஹீரோவாக நடிக்கும் இப்படத்தில் விஜய் சேதுபதி, பகத் பாசில், நரேன், அர்ஜுன் தாஸ், காளிதாஸ் ஜெயராம் என மிகப்பெரிய நட்சத்திர பட்டாளமே நடிக்கிறது.




இப்படத்தை நடிகர் கமல்ஹாசன் தனது சொந்த தயாரிப்பு நிறுவனமான ராஜ்கமல் பிலிம்ஸ் நிறுவனம் மூலம் தயாரிக்கிறார். அனிருத் இசையமைக்கும் இப்படத்திற்கு கிரிஷ் கங்காதரன் ஒளிப்பதிவு செய்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இப்படத்துக்கு அனிருத் இசையமைக்க, கிரிஷ் கங்காதரன் ஒளிப்பதிவு செய்கிறார்.

ஊரடங்கு காரணமாகவும் கமலுக்கு கொரோனா தொற்று ஏற்பட்ட காரணத்தினாலும் விக்ரம் படப்பிடிப்பு தாமதமானது. அதன்பின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்து வந்தது.

விக்ரம் படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்ததாக இயக்குனர் லோகேஷ் கனகராஜ் ஒரு வீடியோ பதிவின் மூலம் தெரிவித்திருந்தார். இந்நிலையில் படம் குறித்த முக்கிய அறிவிப்பு ஒன்றை படக்குழு வெளியிட்டுள்ளது. அதில், "விக்ரம் திரைப்படம் தியேட்டர்களில் வெளியாகவிருக்கும் திகதியை மார்ச் 14.2022 அன்று காலை 7 மணிக்கு அறிவிக்கவிருக்கிறோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கே.ஜி.எப்-2 படத்தின் டிரைலர் வெளியாகிறது




ரசிகர்களால் பெரிதும் எதிர்ப்பார்க்கப்படும் "கே.ஜி.எப்-2" திரைப்படத்தின் டிரைலர் வெளியீட்டு திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

கே.ஜி.எப் படத்தின் முதல் பாகம் கடந்த 2018-ம் ஆண்டு வெளியாகி பிளாக்பஸ்டர் ஹிட்டான நிலையில், தற்போது அப்படத்தின் இரண்டாம் பாகம் தயாராகி உள்ளது. பிரசாந்த் நீல் இயக்கத்தில் "யாஷ்" ஹீரோவாக நடிக்கும் இப்படத்தில், அவருக்கு ஜோடியாக ஸ்ரீநிதி ஷெட்டி நடிக்கிறார். மேலும் பிரபல பொலிவுட் நடிகர் சஞ்சய் தத், அதீரா எனும் வில்லன் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

பின்னர் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக படத்தின் ரிலீஸ் தள்ளிவைக்கப்பட்டது. இப்படம் இந்த ஆண்டு ஏப்ரல் 14ஆம் திகதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் "கே.ஜி.எப்-2" திரைப்படத்தின் டிரைலர் வெளியீட்டு திகதி அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி "கே.ஜி. எப்-2" டிரைலர் மார்ச் 27ஆம் திகதி மாலை 6.40 மணிக்கு வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

## புதிய தோற்றத்தில் அஜித்

நடிகர் அஜித் தன்னுடைய குடும்பத்தினருடன் சமீபத்தில் எடுத்துக்கொண்ட புகைப்படம் இணையதளத்தில் வைரலாகி வருகிறது. தென்னிந்திய திரையுலகில் அதிக ரசிகர்களை கொண்டுள்ள நடிகர் அஜித் குமார்.

தமிழில் ஒரு முன்னணி நடிகராகவும், சமுதாயத்தில் ஒரு நல்ல குடிமகனாகவும், உலகளவில் பிரபலமான ஒரு எப் 1 ரேஸராகவும் புகழ் பெற்றவர்.

சமீபத்தில் அஜித் நடிப்பில் ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் கழித்து வெளியான திரைப்படமான வலிமை வெளியாகி நான்கு நாட்களில், தமிழகத்தில் மட்டும் ரூ.100 கோடியை கடந்து வசூல் சாதனை படைத்துள்ளது. அவரது ரசிகர்கள் இதனை கொண்டாடி வருகின்றனர்.

எச்.வினோத் இயக்கும் அஜித்தின் 61வது படத்தின் பணிகளும் கடந்த சில தினங்களாக விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இப்படத்திற்காக அஜித் 25 கிலோ வரை தனது உடல் எடையை குறைத்து நடிக்க இருப்பதாக சமீபத்தில் தகவல் வெளியாகியிருந்தது.

இந்த நிலையில், அஜித் ரசிகர்களால் குட்டி தல என்று அழைக்கப்படும், அஜித்தின் மகனான 'ஆத்விக்' பிறந்தநாளை முன்னிட்டு அஜித் தனது குடும்பத்தினருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இணையத்தில் வைரல் ஆகியுள்ளது.

அதில் கடுக்கன், தாடியுடன் உள்ள அஜித்துடன் மனைவி ஷாலினி, மகன் ஆத்விக் குமார், மகள் அனுஷ்கா குமார் உள்ளிட்டோர் உள்ளனர். இதனை அவரது ரசிகர்கள் சமூக வலைத்தளத்தில் கொண்டாடி வருகின்றனர்.



# மனிதத்திற்கு எதிரானதென்று சர்வதேச மட்டத்தில் தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்கள்



கடந்தவார தொடர்ச்சி...

சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்காரவும் இதனை ஊடகவியலாளர்களுக்கு பின்னர் உறுதிப்படுத்தியிருந்தார். சிறிலங்காப் புலனாய்வுப்பிரிவினரால்நடாத்தப்பட்டுவருவதாக தமிழர் தரப்பினரால் கூற்றம்சாட்டப்படுகின்ற ஏசியன் ரிபியூன் (Asian Tribune) என்ற ஆங்கில இணையத்தளம், புலிகள் இரசாயன ஆயுதங்களை வைத்திருப்பதாகவும், அவற்றை பாவிக்கத் தயாராகிக்கொண்டிருப்பதாகவும் பல்வேறு தலைப்புக்களில் தொடர்ந்து செய்திகளை வெளியிட்டுக்கொண்டிருந்தது. தொடர்ச்சியாக சிறிலங்காப் படையினரால் அந்த நேரத்தில் வெளியிடப்பட்டுக்கொண்டிருந்த இரசாயன ஆயுதம் பற்றிய செய்திகள்தான், உண்மையிலேயே சிறிலங்காப் படையினர் இரசாயன ஆயுதங்களைப் பாவிக்கத் தயாராகின்றார்களா என்கின்ற சந்தேகத்தை ஏற்படுத்தும்படியாக இருந்தது. அந்தக் காலம் முதல் சிறிலங்கா அரசாங்கமும், அதன் படைத்துறையும் மேற்கொண்டு வந்த நகர்வுகளைப் பார்க்கும் பொழுது, வன்னியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அவர்கள் இரசாயன ஆயுதங்களை பாவிக்கத் தயாராகி வந்தார்கள் என்கின்றதான சந்தேகம் ஏற்படுவது தவிர்க்க முடியாமல் இருந்தது.

**தொண்டர் அமைப்புக்களின் வெளியேற்றம்**

அதிலும் குறிப்பாக, வன்னியில் தங்கியிருந்து பணியாற்றிக்கொண்டிருந்த சர்வதேச தொண்டர் அமைப்பு பணியாளர்களை சிறிலங்கா அரசு அங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றியதைத் தொடர்ந்து, இந்தச் சந்தேகம் மேலும் அதிகரித்திருந்தது. யுத்தம் நடைபெறும் ஒரு இடத்தில் சர்வதேச நியதிகளின் ஒரு அடையாளமாக, சர்வதேச தொண்டர் அமைப்புப் பணியார்களே இருந்து வருவார்கள். சண்டையிடும் இரண்டு தரப்புக்களும் சர்வதேச நியதிகளைக் கடைப்பிடிக்கின்றார்களா என்பதை நேரடியாகவும் மறைமுகமாகவும் கண்காணிக்கும் பொறுப்பை பெரும்பாலும் இந்த தொண்டர் அமைப்பு பணியாளர்களே மேற்கொண்டு வருவார்கள். 'சண்டையிடும் தரப்பினர் சிறுவர்களை யுத்தத்தில் ஈடுபடுத்துகின்றார்களா?' என்பது முதல், 'பொதுமக்களைக் குறிவைத்து வேண்டுமென்றே தாக்குகின்றார்களா?', 'சர்வதேச நியதிகளை மீறி நடந்துகொள்கின்றார்களா?' என்றெல்லாம் கண்காணித்து சர்வதேச நாடுகளுக்கும், ஐ.நாவுக்கும் தகவல் வழங்கும் தரப்பாகச் செயற்படுபவர்கள் இந்த தொண்டர் அமைப்புப் பணியாளர்கள்தாம். அதிலும் குறிப்பாக, யுத்தத்தில் ஈடுபட்டுவரும் ஏதாவது ஒரு தரப்பு, உலகில் தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை அல்லது கிளஸ்டர் குண்டுகளைப் பாவித்தால், அதனை உலகின் கண்களுக்குக் கொண்டு செல்லும் பணியையும் கூட, இந்த தொண்டர் அமைப்பினரே மேற்கொள்ளவேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட தொண்டர் அமைப்புப் பணியாளர்களை முழுவதுமாகவே வன்னியில் இருந்து சிறிலங்கா அரசு வெளியேற்றியிருந்ததானது, வன்னியில் சிறிலங்காப் படைகள் இரசாயன ஆயுதங்களைப் பாவிக்கப் போகின்றார்களா என்கின்றதான சந்தேகத்தை மேலும் அதிகரிப்பதாகவே அந்த நேரத்தில் இருந்தது.

இரசாயன ஆயுதங்கள் மற்றும் கிளஸ்டர் குண்டுகள் என்பது பாரிய அழிவினை எதிரிக்கு ஏற்படுத்தக் கூடியது. கொடூரமான மரணத்தை எதிரிக்கு ஏற்படுத்தக் கூடியது. உலகில் இப்படியான ஆயுதங்களின் பாவனைக்கு எதிராகக் கடுமையான தடை இருக்கின்றது. இப்படிப்பட்ட ஆயுதங்களைப் புலிகள் பாவிக்கப் போகின்றார்கள் என்கின்ற சிறிலங்காவின் கூற்று உண்மையாக இருந்தால், அல்லது இதனை சிறிலங்காப் படையினர் உண்மையாகவே நம்பியிருந்தால், நிச்சயமாக இந்த விடயத்தை சர்வதேசத்திற்கு நிரூபித்து, எந்தவொரு சந்தர்பத்திலும் புலிகள் சுயநிர்ணயக் கோரிக்கையை முன்வைக்க முடியாத அளவிற்கு புலிகளை நிரந்தரப் பயங்கரவாதிகள் ஆக்கிவிடவே முயன்றிருப்பார்கள். புலிகள் இரசாயன ஆயுதங்களைப் பாவிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டால், அதனை அம்பலப்படுத்தி, அதனை நிரூபிக்க சிறிலங்காத் தரப்பிற்கு இருந்த ஒரு நல்ல சந்தர்ப்பம்தான், வன்னியில் இருந்த சர்வதேச தொண்டர் அமைப்புப் பணியாளர்கள். யுத்த முனைகளில் சர்வதேச நியதிகள் கடைப்பிடிக்கப்படுகின்றதா? என்று கண்காணித்துக்கொண்டிருக்கும் ஐ.நா. தொண்டர் அமைப்பு பணியாளர்கள் வன்னியில் பிரசன்னமாகி உள்ள நிலையில் புலிகள் இரசாயன ஆயுதங்களைப் பாவித்தால், அது விடுதலைப் புலிகளின் போராட்டத்தை சர்வதேச சமூகம் முற்றாகவே தடைசெய்வதற்கு ஏதுவானதாக அடைந்துவிடும். இது சிறிலங்காவிற்கு நன்றாகவே தெரியும்.

அப்படி இருந்த நிலையிலும், வன்னியில் இருந்து சர்வதேச தொண்டர் அமைப்புப் பணியாளர்களை பலவந்தமாக வன்னியில் இருந்து சிறிலங்கா அரசு வெளியேற்றியதானது, சிறிலங்கா அரசு தொடர்பான பலமானதொரு சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கின்றது. சிறிலங்கா கூறுவது போன்று வன்னியில் இரசாயன ஆயுதத்தைப் பாவிக்கப் போவது புலிகள் அல்ல என்றும், சிறிலங்காப் படைகளே அங்கு இரசாயன ஆயுதங்களைப் பாவிக்கப் போகின்றார்களோ என்கின்றதாக சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அது இருந்தது. இந்தப் பின்னணியில்தான், வன்னியின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சிறிலங்காப் படைகள் இரசாயன ஆயுதங்களைப் பாவித்ததான செய்தி 2009ம் ஆண்டின் ஆரம்பத்தில் வெளியாகியிருந்தது.

**புதுக்குடியிருப்பில் இரசாயன ஆயுதம்?**

2009ம் ஆண்டு ஏப்பரல் மாதம் 4ம்திகதி, சிறிலங்கா இராணுவத்தின் 58வது டிவிசன் படையினர் புதுக்குடியிருப்பில் மேற்கொண்ட தாக்குதலில், விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகளான கேணல் தீபன், கேணல் விதுஷா, கேணல் துர்கா, கேணல் நாகேஷ் உட்பட சுமார் 200 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாக சிறிலங்கா அரசாங்கம் அறிவித்திருந்தது. அறிவித்ததோடு மாத்திரம் நின்றுவிடாமல், தம்மால் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் உடலங்களின் புகைப்படங்களையும், ஒளிப்படங்களையும் - அது வெளியிட்டும் இருந்தது. ஆனால், சிறிலங்கா இராணுவம் ஆரம்பத்தில் வெளியிட்ட அந்தப் புகைப்படங்கள், அருகில் இருந்து எடுக்கப்படாமல், சற்று தொலைவில் இருந்து எடுக்கப்பட்டவைகளாகவே காணப்பட்டன. அந்தப் புகைப்படங்களில் காணப்படும் உடலங்கள் வழமைக்கு மாறாக கருகிய, அல்லது திராவக எரிகாயங்களுடனான காட்சியினைக் கொண்டவைகளாக இருந்ததையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதனைத் தொடர்ந்து, புதுக்குடியிருப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் இரசாயன ஆயுதங்களைப் பாவித்திருந்தார்களா? என்கின்ற தான கேள்வி, உலகத் தமிழர் மனங்களில் ஏற்பட ஆரம்பித்தன. இந்தச் சம்பவம் நடைபெற்று 3 வருடங்களின் பின்னர் தற்பொழுது வெளியான சில புகைப்படங்கள் புதுக்குடியிருப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்பட்டன என்பதை நிரூபிப்பதாகவே இருக்கின்றன. விடுதலைப்புலிகள் மீது இரசாயன ஆயுதங்களைப் பாவித்துத் தாக்குதல் நடாத்திய சிறிலங்காப் படையினர், தொடர்ந்து அங்கு தங்கியிருக்கும் பொதுமக்கள் மீதும் இந்த இரசாயன ஆயுதத் தாக்குதலை அல்லது கிளஸ்டர் குண்டுத் தாக்குதலை மேற்கொள்ளுவார்களா என்கின்றதான சந்தேகமும், புலம் பெயர்வாழ் தமிழ் மக்களின் உள்ளங்களை அந்த நேரத்தில் வாட்டிவதைக்க ஆரம்பித்திருந்தது. அதனைத் தொடர்ந்து புதுமாத்தளன், வலைஞர்மடம், முள்ளிவாய்கால் போன்ற பாதுகாப்பு வலயப் பகுதிகளில் தங்கியிருந்த மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகள் நிற்பதாகக் கூறிக்கொண்டும், அந்த நேரத்தில் அங்கிருந்த மக்கள் தொகையை மிக மிகக் குறைவாக வெளியிட்டும் அந்தப் பிரதேசத்தில் தடைசெய்யப்பட்ட பயங்கர ஆயுதங்களைப் பாவித்துத் தான் மேற்கொள்ள இருந்த மிக மோசமான ஒரு இன அழிப்பு நடவடிக்கைக்கு தளம் அமைத்திருந்தது சிறிலங்கா அரசாங்கம். தான் நினைத்ததை இறுதியில் செய்தும் முடித்திருந்தது. இப்படியான பின்னணியில் தான் இந்தத் தடை செய்யப்பட்ட ஆயுத விவகாரம் தற்பொழுது மீண்டும் வெளிக்கிளம்ப ஆரம்பித்துள்ளது.

**கிளஸ்டர் குண்டுகள்**

கிளஸ்டர் குண்டுகள் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்ற கொத்தனிக் குண்டுகள் என்பது ஒரு குண்டு வெடித்துச் சிதறி பல குண்டுகளாக பிரிந்து அவ்வாறு பிரிந்து செல்லும் குண்டுகள் ஒவ்வொன்றும் பின்னர் தனித்தனியாக வெடித்து மிகப் பெரிய அழிவினை ஏற்படுத்தும் ஒருவகை வெடிபொருள். பெரும்பாலும் ஆகாய விமானத்தில் இருந்தே கிளஸ்டர் குண்டுகள் வீசப்படுவது வளக்கம். இருந்தபோதிலும் தரையில் இருந்து ஏவப்படும் கிளஸ்டர் குண்டுவகைகளும் இருக்கவே செய்கின்றன. இந்த கிளஸ்டர் குண்டுகளை முதன்முதலில் ஹிட்லரே உபயோகித்திருந்தார்.

Sprengbombe Dickwandig(SD-2) என்ற குறியீட்டுப் பெயரிலும் Butterfly Bomb என்ற பொதுவான பெயரிலும் அழைக்கப்பட்ட கிளஸ்டர் குண்டுகளை 2ம் உலக யுத்தத்தின் பொழுது பொதுமக்கள் மீதான தாக்குதல்களுக்கும், இராணுவ நிலைகள் மீதான தாக்குதல்களுக்கும் ஜேர்மனி உபயோகித்திருந்தது. அதனைத் தொடர்ந்து அமெரிக்கா சோவியத் ஒன்றியம் உட்பட பல்வேறு நாடுகளும் இந்த கிளஸ்டர் குண்டுகளை தமது சண்டைகளின் பொழுது பாவிக்க ஆரம்பித்திருந்தன. குறிப்பாக 1970ம் ஆண்டுமுதல் 1990களின் ஆரம்பம்வரை இந்தக் கிளஸ்டர் குண்டுகள் அனேமாக சண்டைகளில் ஈடுபட்ட அனைத்து நாடுகளினாலும் மிக முக்கியமான ஆயுதமாகப் பாவிக்கப்பட்டுவந்தது குறிப்பிடத்தக்கது. பொதுவாகவே வானில் இருந்து வீசப்படும் இந்த கிளஸ்டர் குண்டுகளை பீரங்கிகளில் இருந்து ஏவப்படும் செல்களின் வடிவில் அமெரிக்கா இராணுவம் உருவாகியிருந்தது. இந்த வகை செல்களுக்கு ICM-Improved Conventional Munitions என்று அமெரிக்கா இரணுவம் பெயரிட்டிருந்தது. அதேவேளை ஆட்டிலறியில் இருந்து ஏவப்படும் இந்த கிளஸ்டர் குண்டுகளை அமெரிக்க வீரர்கள் பொப்கோர்ன்(Popcorn) என்றும் மத்தாப்பு அல்லது பட்டாசுகள் (firecracker) என்றும் செல்லமாக அழைப்பார்கள். மிகவும் உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தக்கூடிய இந்த கிளஸ்டர் குண்டுகளை உலகில் 34 நாடுகள் தயாரித்ததாகவும் 23 நாடுகள் சண்டைகளின் பொழுது இந்த வகைக் குண்டுகளைப் பயன்படுத்தியிருந்ததாகவும் பதிவுகள் தெரிவிக்கின்றன. இந்த கிளஸ்டர் குண்டுகளில் இரசாயன ஆயுதங்களை இணைக்கும் தொழில்நுட்பத்தினை 1950களிலும் 60களிலும் சோவியத் ஒன்றியம் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் பயன்படுத்தியிருந்தன. பரவலாக எழுந்த கண்டனங்களைத் தொடர்ந்து இந்த இரண்டு நாடுகளும் இந்த வகை குண்டுகளின் பாவனையைக் கைவிடுவதாக அறிவித்திருந்தன. எதிர்புக்கள் இருந்த போதிலும் இந்தக் கிளஸ்டர் குண்டுகளின் பாவனைக்கு எதிராக 2000ம் ஆண்டுகளில் மிக மும்முரமான எதிர்ப்புக்கள் கிளம்ப ஆரம்பித்திருந்தன. கிளஸ்டர் குண்டுகள் ஒரு குறிப்பிட்ட இலக்கின் மீது ஏவப்பட்டாலும் அந்தக் குண்டுகள் வெடிக்கும் சந்தர்ப்பத்தில் அது குறிப்பிட்ட இலக்கைத் தாக்குவதுடன் தமது பணியினை முடித்துக்கொள்வது கிடையாது. ஏவப்படும் இலக்கினையும் கடந்து கிளஸ்டர்குண்டுகள் பரந்த அளவிலான பாதிப்பினை ஏற்படுத்திவிடும் சாத்தியம் இருப்பதால் கிளஸ்டர் குண்டுகளால் இராணுவ இலக்கிற்கு ஏற்படும் பாதிப்புக்களை விட சிவிலியன் இலக்குகளுக்கே அதிக பாதிப்புக்கள் ஏற்படுவதாக நடுநிலையான மனித உரிமை அமைப்புக்கள் குற்றம் சுமத்தியிருந்தன. அத்தோடு வானில் இருந்து வீசப்படும் இந்தக் கிளஸ்டர் குண்டுகள் மொத்தமாகவே அல்லது பகுதியாகவே வெடிக்காத பட்சத்தில் மண்ணுக்குள்ளும் மறைவிடங்களிலும் நீண்டகாலமாகத் தேங்கிக்கிடந்து அப்பாவிப் பொதுமக்களுக்கு அல்லது சிறுவர்களுக்கு அதிக பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய சாந்தர்ப்பம் அதிகம் இருப்பதாகவும் குற்றம் சுமத்தப்படுகின்றது.

உதாரணத்திற்கு 1960களின் நடுப்பகுதி முதல் 70களின் ஆரம்பம்வரை நடைபெற்ற வியட்னாம் யுத்தத்தின் பொழுது அமெரிக்கப்படையினர் எண்ணிலடங்காத கிளஸ்டர் குண்டுகளை வியட்னாமில் வீசியிருந்தார்கள். அதில் வெடிக்காது விடப்பட்ட குண்டுகளால் இன்றைக்கும் அங்குள்ள மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றது குறிப்பிடத்தக்கது. வெடிக்காது கைவிடப்பட்ட குண்டுகளால் வருடம் ஒன்றிற்கு சராசரியாக 300 வியட்னாமியர்கள் பாதிக்கப்பட்டுவருவதாகக் கூறப்படுகின்றது. இது ஒரு உதாரணம் மாத்திரம்தான். உலகில் ஒவ்வொரு நாடும் சண்டைகளின் பொழுது பாவித்த கிளஸ்டர் குண்டுகளில் வெடிக்காமல் கிடக்கின்ற குண்டுகளால் யுத்தம் முடிவடைந்து பல வருடங்கள் கடந்த நிலையிலும் பாதிப்புகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

இதனால் கிளஸ்டர் குண்டுப் பாவனை என்பதை மனிதத்திற்கு எதிரான ஒரு தாக்குதலாகவே இன்று நவீன உலகம் பார்க்க ஆரம்பித்துள்ளது. சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம், Cluster Munition Coalition (CMC) என்ற அமைப்பு, ஐக்கியநாடுகள் சபை உட்பட நூற்றிற்கும் மேற்பட்ட அமைப்புக்களும் உலகில் பிரபல்யமான பல மனித உரிமை ஆர்வலர்களும் கிளஸ்டர் குண்டுப் பாவனைக்கு எதிராகக் குரல் எழுப்பியிருந்தார்கள். கிளஸ்டர் குண்டுப் பாவனையை முற்றாகவே தடைசெய்யவேண்டும் என்று Handicap International என்ற அமைப்பு மிகமும்முரமாகக் கோரிக்கையை முன்வைத்திருந்ததுடன் தனது கோரிக்கைக்கு ஆதரவாக இலட்சக்கணக்கான கையெழுத்துக்களை 2005ம் ஆண்டு முதல் கேசரித்தும் வந்தது. உலக அளவில் இந்த கிளஸ்டர் குண்டுகளினால் பாதிக்கப்பட்ட 13,306 ஊடல் ஊனமுற்றவர்களை Handicap International என்ற இந்த அமைப்பு பேணிவருகின்றது.

11 ஆம் பக்கம் பார்க்க...
நெற்றி பொறியன்

**02ஆம் பக்க தொடர்ச்சி...**

இயற்கை உரம் ஆரோக்கியமானது எமது நாட்டிற்குத் தேவையானது என்பது உண்மைதான். எனினும் திடீரென மாற்றங்களை மண்ணில் ஏற்படுத்துவது அவ்வளவு எளிதல்ல.

இழப்பொன்றினைச் சந்தித்தேயாக வேண்டும் என்பது நியதி. இங்கு உற்பத்திகளைக் குறைக்கின்ற நடவடிக்கையாக யூரியாவை தடை செய்த அரசு. வெளிநாட்டில் இருந்து அரசியினை இறக்குமதி செய்கின்றது. இது விவசாயிகளின் வயிற்றில் அடிக்கின்ற செயற்பாடாகும்.

எனினும் நாட்டில் தாமதமின்றி எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன். கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த 37.300 மெற்றிக் தொன் டீசல் தொகை தரையிறக்கப்பட்டுள்ளது. இதன்படி. மின் உற்பத்திக்காக சுமார் 8.000 மெற்றிக் தொன் டீசல் வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும். எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நாடு முழுவதும் 7 மணித்தியாலங்கள் 30 நிமிடம் மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது. காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை 5 மணி நேரமும். மாலை 6.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை 2 மணி நேரம் 30 நிமிடங்களும் மின் தடை அமுல்படுத்தப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும். எதிர்வரும் ஐந்து நாட்களுக்கு பின்னர் எவ்வித வெட்டுமின்றி மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எது எவ்வாறிருப்பினும் நாட்டுக்கு எரிபொருளும். மின்சாரமும் மிகவும் அத்தியாவசியமானது. இவையின்றி இந்நாட்டின் தொழிற்துறைகளை இயக்க முடியாது. அத்தியாவசியத் தேவைகளை தடையின்றி முன்னெடுக்க முடியாது போகும். நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கும் இன்று மின்சாரத்துறையே அத்தியாவசியமானது. ஏற்கனவே கொவிட் பரவலால் ஸ்தம்பிதமடைந்துள்ள இந்நாடு. இன்று எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்காக மீண்டும் ஸ்தம்பிதமடைந்துள்ளது. இன்றைய பூகோள அரசியலும் உலகின் போக்கும் தொடர்ச்சியான உலக சந்தையின் மாற்றங்களும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை சிக்கலுக்குள் தள்ளியுள்ளது என்பது உண்மை தான். எனினும் இதற்கெல்லாம் ஈடுகொடுத்து இந்நாட்டினை முன்கொண்டுசெல்லவேண்டிய தேவை ஆட்சியிலிருக்கும் அரசுக்கு உண்டு. தொடர்ச்சியான இவ் விலையேற்றங்களால் நாட்டின் மக்களை துன்பத்திற்குள் வைத்திருப்பது ஆட்சியிலிருக்கும் அரசிற்கு உகந்ததல்ல. அது அரசியல் ரீதியாகவும் நாடு தொடர்பான மக்களது எதிர்பார்ப்பிலும் கேள்விக்குறியையும் சினத்தையும் ஏற்படுத்தும். மாற்றுவழிகளைக் கையாள அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

அரச கொள்கைகளில் மாற்றங்கள் தேவை என கடந்த பல வருடங்களாக மனித உரிமை ஆர்வலர்களால். சர்வதேச தரப்பினரால். நாட்டின் புத்திஜீவிகளால். அரச உயர் பதவியில் அங்கம் வகித்தவர்களால். அரசியல் பிரமுகர்களால் கோரப்பட்டு வருகின்றது. பொருளாதார ரீதியான கொள்கைகளில் மாற்றங்கள் தேவை என வலியுறுத்தப்படுகின்றது.இன்று நாட்டின் வளங்கள் வெளிநாடுகளுக்கு தாரைவார்க்கப்பட்டுள்ளதாக கருத்துக்கள் வலுப்பெற்று வருகின்றன. நாடு முழுவதும் இருந்து வரக்கூடிய நாட்டு மக்களின் குரல்களையும் அரசு உள்வாங்கி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுவது காலத்தின் கட்டாயம்.

**10ஆம் பக்க தொடர்ச்சி...**

*இவர்களில் 98 வீதமானவர்கள் சிவிலியன் என்பதுடன் 27 வீதமானவர்கள் சிறுவர்கள் என்பது. கிளஸ்டர் குண்டுகள் உலகில் முற்றாகவே தடைசெய்யப்படவேண்டும் என்ற வாதத்தை அதிக வலுவாக்கியிருந்தது. இதேபோன்று* Human Rights Watch, Landmine Action,Mines Action Canada *போன்ற சர்வதேச அமைப்புக்களும் கிளஸ்டர் குண்டுகளுக்கு எதிராகக் குரல்கொடுத்திருந்தன.*

**டுப்ளின் உடன்பாடு**

*உலகம் முழுவதிலும் பரவலாக எழுந்த இந்த எதிர்ப்புக் குரல்கள் காரணமாக கிளஸ்டர் குண்டு பாவனைக்கு எதிரான சர்வதேசத் தடை ஒப்பந்தம்* (Convention on Cluster Munitions (CCM) *2008ம் ஆண்டு மே மாதம் 30ம் திகதி அயர்லாந்தின் தலைநகர் டுப்ளினில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த சர்வதேச உடன்பாட்டை ஏற்றுக்கொண்டு இதுவரை 101 நாடுகள் கையொப்பம் இட்டுள்ளதுடன் 71 நாடுகள் இந்த ஒப்பந்தத்தை தமது நாடுகள் தமது சட்டவரைபுகளிலும் உள்ளடக்கியுள்ளன. இப்படியான பின்னணியில்தான் வன்னி யுத்தத்தில் சிறிலங்கா இராணுவம் கிளஸ்டர் குண்டுகளைப் பாவித்திருப்பது பற்றி வெளியான செய்திகளை நாம் பார்த்தாகவேண்டி இருக்கின்றது.*

*முதலாவது: உலகமே ஏற்றுக்கொண்டுள்ள கிளஸ்டர் குண்டுகளுக்கு எதிரான சர்வதேச ஒப்பந்தத்தில் சிறிலங்கா அரசு இதுவரை கையெழுத்து இடவில்லை. அந்த ஒப்பந்தத்தை சிறிலங்கா ஏற்றுக்கொள்ளவும் இல்லை. இது சிறிலங்கா தேசம் கொத்தணிக்குண்டுகளை தனது சண்டைகளின் பொழுது பாவிக்கும் நியாயத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது.*

*இரண்டாவது: உலகமே கிளஸ்டர் குண்டுகளுக்கு எதிராக அணி திரண்டு நின்றபொழுது. 2008 இல் கொத்தனிக் குண்டுகளுக்கு எதிராக டுப்பிளின் தீர்மானம் கொண்டுவரப்பட்ட நிலையில்தான் 2009ம் ஆண்டு ஏப்ரல் 4ம் திகதி முதல் மே 18 வரையிலான காலப்பகுதிகளில் கிளஸ்டர் மற்றும் இரசாயனக் குண்டுகளை சிறிலங்கா இராணுவம் பாவித்துள்ளதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.*

*மேற்கூறப்பட்ட இரண்டு விடயங்களும் இந்த கிளஸ்டர் குண்டு விவகாரத்தை உலகத்தின் பார்வைக்கு உலகத் தமிழர் நகர்த்திச் செல்வதற்கு உதவக்கூடிய முக்கிய காரணிகள். வன்னி யுத்தத்தில் சிறிலங்கா இராணுவம் தடைசெய்யப்பட்ட குண்டுகளைப் பாவித்திருப்பதாக சர்வதேச அமைப்புக்களைச் சேர்ந்த அலென் பொஸ்டன் மற்றும் லோறா சீஸ்மன் போன்றவர்களின் கருத்துக்கள் மேலும் ஆதாரப்படுத்தப்பட்டு கிளஸ்டர் குண்டுப் பாவணைக்கு எதிராகப் போராடிய சர்வதேச அமைப்புகளின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்படவேண்டும். உலகத் தமிழ் அமைப்புக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் தமக்கிருக்கும் தனிப்பட்ட தொடர்புகளைப் பயன்படுத்தி இந்த விடயத்தை சர்வதேச ஊடகங்களின் கவனத்திற்கு கொண்டு செல்வது மிக மிக அவசியம்.*

**06 ஆம் பக்கத் தொடர்ச்சி...**

*ஹங்கேரியில் 1.14 லட்சம் பேரும். மால்டோவாவில் 79 ஆயிரம் பேரும். ஐரோப்பிய நாடுகளுக்கு 69 ஆயிரம் பேரும். சுலோவோக்கியாவுக்கு 67 ஆயிரம் பேரும் சென்றுள்ளனர். போர் நடந்து வருவதால் மேலும் 40 லட்சம் பேர் உக்ரைனை விட்டு வெளியேறக்கூடும் என்று கணிக்கப்பட்டு இருக்கிறது. மேலும் அந்தகணிப்பு அதிகரிக்கலாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டு இருக்கிறது. இதனால் இது இந்த நூற்றாண்டில் மிகப்பெரிய அகதிகள் வெளியேற்றமாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மேற்கு நாடுகள் ஆயுத உதவிகள் வழங்கி வருவதால் உக்ரைன் எதிர் தாக்குதலை அதிகரித்துள்ளது. ஊருக்குள் புகுந்த ரஷ்ய துருப்புகளை உக்ரைன் ராணுவம்வீழ்த்திவருகிறது. இதனால் ரஷ்யாவுக்கு இழப்பு அதிகமாக இருந்து வருவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில். உக்ரைன் எல்லையில் இருக்கும் பெலாரஸின் பிரெஸ்ட் பகுதியில் நடந்த இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை குறித்து ரஷ்ய தூதுக்குழுவினர் விளக்கம் அளித்துள்ளனர்.*

*இது தொடர்பாக மொஸ்கோவில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினின் ஆலோசகரும், அந்நாட்டு தூதுக்குழு தலைவருமான விளாடிமிர் மெடின்ஸ்கி. அரசியல் தீர்வு தொடர்பான பிரச்சினைகள் மற்றும் நிலைப்பாடுகள் முற்றிலும் தெளிவாக உள்ளன. இதன் ஒரு பகுதியாக பரஸ்பர புரிதல் பேச்சுவார்த்தையின்போது காணப்பட்டது. முற்றுகையிடப்பட்ட நகரங்களில் இருந்து பொதுமக்கள் வெளியேற. பாதுகாப்பான வழித்தடங்களை உருவாக்குவது மற்றும் அவை உருவாக்கப்படும் பகுதிகளில் உள்ளூர் போர் நிறுத்தங்களைக் கடைப்பிடிப்பது குறித்து ரஷ்யாவும் உக்ரைனும் ஒரு தற்காலிக உடன்பாட்டை எட்டின எனத் தெரிவித்தார். அடுத்த சுற்று பேச்சுவார்த்தை ஒப்பந்தங்களுக்கு வழிவகுக்கும் என்றும். எனினும் அதில் சில ரஷ்ய மற்றும் உக்ரைன் பாராளுமன்றங்களால் அங்கீகரிக்கப்படவேண்டும் என்று ரஷிய தூதுக்குழு உறுப்பினரும் அந்நாட்டின் மூத்த பாராளுமன்ற உறுப்பினருமான லியோனிட் ஸ்லட்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.*

**தொடரும்...**

## முன்னாள் மனித உரிமை ஆணையாளர், மனித உரிமை செயற்பாட்டாளர், சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் அவர்களின் நேர்காணல்

**கடந்தவார தொடர்ச்சி...**

**கேள்வி : இதிலே மற்றுமொரு விடயமாக பயங்கரவாத தடைச்சட்டம் என்பது குறிப்பாக இலங்கையை பொறுத்தவரையிலே அவர்கள் நீங்குவதற்கான தாமதம் என்னவென்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? இன்று உலகளாவிய ரீதியிலே அவர்கள் டயஸ் போராவினால் இலங்கைக்கு ஆபத்து இருக்கின்றது என்று கூறுகின்றார்கள் இந்த டயஸ் போரா பற்றி உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : டயஸ் போரா ஆபத்து என்று கூறுகின்றார்கள். அதன் பின்னர் அங்கிருக்கின்ற எத்தனையோ அமைப்புக்களை சட்ட விரோதம் என பட்டியலிட்டிருக்கின்றார்கள். அதே நேரம் ஜனாதிபதி அழைக்கின்றார். அதாவது வெளிநாட்டிலிருக்கும் டயஸ் போராக்கள் நாட்டில் முதலீடு செய்யுங்கள் என்று. எனவே அதிலே முரண்பாடு உங்களுக்கு தெரியவில்லையா, அதுவும் முக்கியமாக தமிழ் டயஸ் போரா என்றால் எத்தனையோ வடக்கு கிழக்கில் இருக்கின்ற மக்களுக்கு உதவிகளை அவர்களின் வாழ்வாதாரத்திற்காக தற்பொழுது கூட எத்தனையோ ப்ரொஜெக்ட்ஸ் என இங்கிருக்கும் சில சமூகங்களுடன் சேர்ந்து அவ்வாறான எத்தனையோ செயற்பாடுகளிலும் அவர்கள் வந்து ஈடுபட்டுக்கொண்டு தான் இருக்கின்றார்கள். அதுவும் மனித உரிமை மீறல்கள் பற்றி எல்லாம் கூட சர்வதேச மட்டங்களில் வந்து அழுத்தங்களை கொடுத்துக்கொண்டு தான் இருக்கின்றார்கள். அந்த செயற்பாடுகளை பயங்கரவாதம் என முத்திரை குத்தி இவர்கள் ஆபத்தானவர்கள் என்று சொன்னாலும் கூட எந்தவிதமான ஆபத்து இருந்தாலும் கூட என்னைப்பொறுத்தவரையில் மனித உரிமை விதிமுறைகள் இருக்கின்றன சர்வதேச மட்டத்தில். அந்த மனித உரிமை விதிமுறைகளுக்கு ஏற்ப தான் எந்த சட்டமாக இருந்தாலும் இயக்கப்பட வேண்டும். அது தான் எங்களுடைய அடிப்படை அதிலிருந்து தான் நாங்கள் தொடங்க வேண்டும்.

**கேள்வி : மற்றுமொரு விடயமாக கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களின் விடயம் தொடர்பாக உங்களுடைய நிலைப்பாடு எவ்வாறிருக்கின்றது?**

பதில் : கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்கள் எங்களுக்கு தெரியும் தற்போதைய 20 ஆம் திகதியுடன் போராட்டம் தொடங்கி 5 வருடமாகின்றது. காணாமலாக்கப்பட்ட வர்களின் குடும்பங்கள் அதற்காக ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கின்றார்கள். அதே நேரம் 2017 இல் காணாமல் ஆக்கப்படுவது ஒரு குற்றம் என்று சொல்லி இலங்கை சட்டத்தில் அதற்கு எதிராக ஒரு சட்டம் இயற்றப்பட்டது. ஆனாலும் கூட அதிலுள்ள பிரச்சனை இனி எதிர்காலத்தில் ஏற்படும் காணாமலாக்கப்படுதல் தான் குற்றம். ஆனால் முன்னர் நடந்தது அந்த சட்டத்திற்குள் வரப்படுவதில்லை. தற்பொழுது போராடும் குடும்பங்களை நாம் பார்ப்போமானால் அவர்கள் எத்தனையோ இன்னல்களை எதிர்கொள்ளுகின்றார்கள். அதாவது பாதுகாப்பு தரப்பிலிருந்து கண்காணிப்புக்கள் மிரட்டல்கள் மற்றும் எனக்கு தெரிந்தவர்களே சொல்வார்கள் ஒரு மாதத்தில் மட்டும் 5 அல்லது 6 தடைவைகள் வீட்டிற்று வந்து விசாரிப்பார்களாம் என்ன செய்கின்றீர்கள் எங்கே போகின்றீர்கள் எந்த போராட்டத்தில் ஈடுபடுகின்றீர்கள் ஏன் போராட்டத்திற்கு போகின்றீர்கள் நாளன்டைக்கு போராட்டம் இருக்கிறதா என்றவாறு தொலைபேசி தொடர்பை ஏற்படுத்தி கேற்கின்ற அவ்வாறான எத்தனையோ மிரட்டல்கள் கண்காணிப்புக்கள் அதற்கு மத்தியில் தான் இந்த காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் இந்த போராட்டங்களில் ஈடுபடுகின்றன. உங்களுக்கே தெரிந்திருக்கும் கடந்த வருடத்தில் கூட கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களின் 60 க்கும் மேற்பட்ட தந்தை தாய்மார்கள் இறந்திருக்கின்றார்கள். எனவே அவர்கள் உண்மையை தெரிந்துகொள்ளாமலேயே தானே இறந்திருக்கின்றார்கள். வேறு நாடுகளை பார்த்தால் கூட உள்நாட்டு இனப்பிரச்சினைகள் பாரபட்சம் அதன் அடிப்படையில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த நாடுகளை பார்த்தால் கூட பாதிக்கப்பட்டவர்கள் பல காலமாக போராடித்தான் அவர்கள் உண்மை நீதி காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அவர்கள் தெரிந்துகொண்டிருக்கின்றார்கள். சில நாடுகளில் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. ஏனெனில் எந்த அரசாங்கத்திற்குமே 100 வீதம் அதை கண்டுபிடிக்கவோ அந்தளவு தூண் டுதல் இல்லை. அது பயம் அதாவது பெரும்பான்மை சமூகம் நாங்கள் இவ்வாறான நடவடிக்கையை எடுத்தால் பெரும்பான்மை சமூகம் என்ன செய்யும் அல்லது அரசாங்கத்திற்கு இராணுவத்திற்கு எதிராக விசாரணைகளை தொடங்கி அவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்குதல் செய்து வழக்கு தொடுத்தால் என்ன செய்யும்.

**தொடரும்...**



# பல்சுவை கதம்பம்



## முகம் பளிச்சிட சில பயனுள்ள அழகு குறிப்புகள்...!

மஞ்சளில் இருக்கக்கூடிய ஆண்ட்டிசெப்டிக் துகள்கள் சருமத்தில் ஏற்படக்கூடிய அலர்ஜிகளிலிருந்து நம்மை காத்திடும். வெள்ளரியை பேஸ்ட்டாக்கிக் கொள்ளுங்கள் அத்துடன் ஒரு ஸ்பூன் மஞ்சள் தூளை சேர்த்து நன்றாக கலக்கி முகத்தில் ஃபேஸ் மாஸ்க்காக போட வேண்டும். நன்றாக காய்ந்ததும் கழுவி விடலாம்.



கற்றாழையில் இருக்கும் சத்துக்கள் சருமத்தை ஃபிரஸ்ஸாக வைத்திருக்க உதவுகிறது. வெள்ளரிச்சாறுடன் கற்றாழை ஜெல் கலந்து தினமும் இரவு படுப்பதற்கு முன்னால் தடவிக் கொள்ளுங்கள். அரை மணி நேரம் கழித்து கழுவி விடலாம். இது சருமத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் மட்டுமல்ல சரும சுருக்கங்கள் ஏற்படாமலும் தடுத்திடும்.

உலர்ந்த ரோஜா இதழ்களுடன் சிறிது பன்னீரும் சந்தனமும் அரைத்து முகத்தில் தடவ தோலின் நிறம் பொலிவு பெறும். பால், கடலை மாவு, மஞ்சள், சந்தனம், அனைத்தையும் கலந்து முகத்தில் தடவி குளித்தால் சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாறும்.

வேப்பிலையும், வெள்ளரியும் முதலில் ஒன்றாக அரைத்துக் கொள்ளுங்கள். ஓட்ஸ் தனியாக அரைத்துக் கொள்ளுங்கள். பின்னரத்துடன் ஒரு ஸ்பூன் மஞ்சள் தூள் மற்றும் இரண்டு ஸ்பூன் ஓட்ஸ் பவுடர் சேர்த்து தேவையான அளவு தண்ணீர் சேர்த்து நன்றாக கலக்க வேண்டும். அதனை முகத்தில் தடவி ஸ்க்ரப் செய்து வந்தால், உங்கள் முகம் பளிச் பளிச்தான்.

## தினமும் மாதுளை சாறு பருகி வருவதால் கிடைக்கும் அற்புத பலன்கள் !!

மாதுளையில் வைட்டமின் ஏ, வைட்டமின் சி, பொட்டாசியம் மற்றும் பைபர் அதிக அளவில் உள்ளது.

மாதுளை சாற்றில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்ட்கள் தசைகளை வலுப்படுத்தி, உடற்பயிற்சியின் பின்னர் மீட்க உதவும். அவர்கள் தடகள உடற்பயிற்சியின் போது செயல்திறனை மேம்படுத்தலாம்.



மாதுளையில் உள்ள பாலிஃபினல் என்ற காம்போனட் நம் மூளைக்கும் நம்முடைய ஞாபக சக்திக்கும் நல்லது. வைட்டமின் சி மற்றும் இரும்புச்சத்து அதிகமாக உள்ளதால் குடல் புண், மலச்சிக்கல் , வயிற்றுப் புண், மற்றும் ரத்த சோகை உள்ளவர்களுக்கு பரிந்துரைக்கப்படுகிறது.

பொதுவாக மாதுளை இரத்த விருத்தியை ஏற்படுத்தும் உடலுக்கு பலம் கொடுக்கும் அதை துவர்ப்புச் சுவை வயிற்றுப்போக்கு , சீதபேதி ரத்த பேதி போன்றவை கட்டுப்படும்.

மாதுளம் பழம் மலமிளக்கும் இயல்புடையது. அன்றாடம் பாதி அளவு மாதுளை பழத்தை நன்றாக மென்று சாப்பிட மலக்கட்டு நீங்கி நன்றாக மலம் இளகி இறங்கும். கடுமையான இருமலுக்கு மாதுளம் பழத்தை பக்குவம் செய்து சாப்பிடலாம்.

மாதுளை பழத்தின் விதையை சேகரித்து வெயிலில் உலர்த்தி பொடி செய்து கொண்டு சிட்டிகை பொடியை பசுவின் பாலில் கலந்து தினமும் 2 வேளை சாப்பிட தாதுவை கூட்டி உடல் நலம் பெருகும்.

பித்தக் கோளாறுகள், அதிகப்படியான உடல் சூட்டினால் ஏற்படும் காய்ச்சல் போன்றவற்றை குணப்படுத்தி உடல் வெப்பத்தை சமப்படுத்தும் மேலும் குளிர்ச்சியை உண்டு பண்ணி நலம் பெறச் செய்யும்.

## அதிக மருத்துவ குணம் நிறைந்துள்ள பப்பாளி !!



பப்பாளியில் சக்திவாய்ந்த ஒக்ஸி ஜனேற்ற விட்டமின்கள் மூலம் செல்களை ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்க உதவும்.

விட்டமின் ஏ நல்ல பார்வைக்கு முக்கியமானது, மற்றும் பப்பாளி ஒரு சிறந்த மூலமாகும். பீட்டா கரோட்டின் என்பது விட்டமின் ஏ வடிவமாகும், இது பழங்கள், காய்கறிகள் மற்றும் சில புரத உணவுகளில் நாம் உட்கொள்கிறோம்.

பப்பாளி பழத்தை முகத்தில் தடவி வந்தால் கண் கருமை, முகத்தில் சுருக்கம், நீங்கி முகத்தில் பளபளப்பு மற்றும் அழகு கூடும்.

பப்பாளிபழம் சர்க்கரை, நீரிழிவு பிரச்சனையை குணமாக்குவதில் சிறப்பாக செயல் படக்கூடியது. இது ரத்தில் உள்ள சர்க்கரை அளவை கட்டுப்பாட்டில் வைப்பதோடு, அவர்களின் உடல் சோர்வை குறைகிறது.

பப்பாளியில் உள்ள விட்டமின்கள் ஏ, சி மற்றும் ஈ ஆகியவற்றின் கலவையானது சக்திவாய்ந்த ஆக்ஸி ஜனேற்ற விளைவுகளை வழங்குகிறது. அவை ஃப்ரீரேடிக்கல்களைக் குறைத்து ஒட்டுமொத்த புற்றுநோய் அபாயத்தைக் குறைக்கலாம்.

பப்பாளி எல்லா காலங்களிலும் கிடைக்கக்கூடியது. பப்பாளியில் அதிக மருத்துவ குணம் நிறைந்துள்ளது. சத்துக்கள் அதிகம் உள்ளன. இதனுடைய விளையும் மலிவானது. சிவப்பு, மஞ்சள், பச்சை, நிறம் கொண்டது. வருடம் முழுவதும் கிடைக்கக் கூடிய பழம்.

பப்பாளி பழத்தில் நோய் எதிர்ப்பு சத்தியை அதிகரிக்கும் தன்மை உள்ளது. ரத்தில் நோய் எதிர்ப்பு சத்தியை அதிகரித்து, நோய் தொற்று ஏற்படுவதை கட்டுப்படுத்துகிறது.

## தினமும் நெல்லிக்காய் சாறு அருந்துவதன் பயன்கள்

ஒரு மனிதனுக்கு தினசரி 50 மி.கி அளவுக்கு விட்டமின் 'சி' தேவைப்படுகிறது. இந்தத் தேவையை நெல்லிக்கனி உண்பதன் மூலமாக எளிதில் பெற்றுவிட முடியும். நெல்லிக்காயில் நிறைந்திருக்கும் விட்டமின் 'சி' ரத்தக்குழாய்களில் படிந்திருக்கும் கொலஸ்ட்ராலை சுலபமாகக் கரைத்திடும். எனவே, மாரடைப்பைத் தவிர்க்கலாம்.

தினமும் காலை வேளையில் வெறும் வயிற்றில் நெல்லிக்காய் சாற்றைக் குடித்தால், உடலில் தேங்கியிருக்கும் தேவையற்ற கொழுப்புகளை நீக்கி, உடல் எடையைக் குறைக்க முடியும்.

நெல்லிக்காய் சாறு மற்றும் பாதாம் எண்ணெய் ஆகியவற்றை சம அளவு எடுத்துக்கொண்டு, அதில் சிறிது எலுமிச்சை சாறு சேர்த்த கலவையை இரவில் கூந்தலில் தேய்த்து, காலையில் கழுவிவிடலாம். விரைவில் கூந்தல் கறுப்பாக மாறும்.

நெல்லிக்கனியை தேனில் ஊறவைத்து தினமும் சாப்பிட, ரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் அளவு உயரும். அழகான சருமத்தையும் பெறமுடியும். முடி கொட்டும் பிரச்சனையை முடிவு கட்டும். புதிதாக முடிகள் வளரும்.

நெல்லிக்காய் சாறு தயாரித்து, அதைப் பருகுவதன் மூலம் ரத்தசோகை, குடல் புண், சர்க்கரைநோய், கண் நோய்களிலிருந்து விடுபடலாம். கண் பார்வை கூர்மையாகும்.. மாலைக்கண் வியாதி நீங்கும்.

தேனுடன் சேர்த்து அருந்தி வந்தால், சக்கரை வியாதியிலிருந்து விடுதலை கிடைக்கும். மேலும் மலச்சிக்கல் மற்றும் வாயு பிரச்சனைகளை தீர்க்கும்.

## உடலுக்கு பல்வேறு மருத்துவ நன்மைகளை அள்ளித்தரும் வெந்தயம் !!

வெந்தயத்திற்கு உடல் எடையை குறைக்கும் சக்தி உண்டு. வெந்தயத்தை சாப்பிட்டால் அதில் உள்ள நார்ச்சத்து வயிற்றை நிரப்பி நீண்ட நேரம் பசி எடுக்காமல் தடுத்து உடல் எடையை குறைக்க உதவும்.

மாதவிடாய் வருவதற்கு 5 நாட்களுக்கு முன்பு வெந்தயத்தை பொடியாக்கி 5 கிராம் அளவு எடுத்து தேனில் கலந்து சாப்பிட்டு வர மாதவிடாய் வலி நீங்கும்.

சிறுநீரக கற்கள் காரணமாக அதிக வலி ஏற்படும்போது வெந்தயத்தை சாப்பிட்டால் சிறுநீரகத்தில் உள்ள நச்சுக்கள் முற்றிலுமாக வெளியேற்றப்படும். இதன் மூலம் சிறுநீரகம் பலமாகும்.

சர்க்கரை நோயாளிகள் தொடர்ந்து 24 வாரங்கள் முளைகட்டிய வெந்தயத்தை சாப்பிட்டு வந்தால் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறையும். வெந்தயத்தில் உள்ள அமினோ அமிலம் இன்சுலின் உற்பத்தியை துரிதப்படுத்துகிறது.

10 கிராம் அளவு வெந்தயத்தை நெய் சேர்த்து வறுத்து, அதில் சிறிது சோம்பு, உப்பு சேர்த்து அரைத்து சாப்பிட வயிற்றுப்போக்கு குணமாகும்.

வெந்தய தோசையை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் சிறுநீரகத்தில் கல் இருக்காது. வெந்தயத்தில் கரையும் நார்ச்சத்து இருப்பதால், இதனை காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர, மலச்சிக்கல் பிரச்சனை நீங்கும்.

## கார்போஹைட்ரேட் மற்றும் புரதம் நிறைந்து காணப்படும் மக்காச்சோளம் !!

இயற்கை உணவான மக்காச்சோளம் நீரிழிவு ஏற்படுவதற்கான ஆபத்தை குறைக்கிறது. கார்போஹைட்ரேட் மற்றும் புரதம் நிறைந்து காணப்படுவதால் மன அழுத்தத்தை தடுக்கிறது.

மஞ்சள் நிறம் கொண்ட மக்காச்சோளம், குரல்வளைவில் ஏற்படக்கூடிய நோய் அபாயத்தை தவிர்க்கிறது. மேலும் பார்வைக்கோளாறு ஏற்படாமல் கண்களை பாதுகாக்கிறது.

கர்ப்பிணி பெண்களுக்கு ஆரோக்கியம் தரும் உணவுகளில் மக்காச்சோளம் ஒன்று. கர்ப்பிணி பெண்கள் தங்களின் வழக்கமான உணவாக சோளத்தை உட்கொள்ள வேண்டும் என்று சுகாதார நிபுணர்கள் ஆலோசனை வழங்குகின்றனர்.

மக்காச்சோளம் குறைந்த அளவு கொழுப்பினை கொண்டுள்ளதால் இதய ஆரோக்கியத்திற்கும் பயனுள்ளதாக இருப்பதோடு, இதயம் சம்பந்தப்பட்ட நோய்களையும் எதிர்க்க உதவிபுரிகிறது.

சோள மாவை அழகு, சமையலுக்கு பயன்படுத்துவதோடு மட்டுமல்லாமல், தோல் தடித்தல், எரிச்சல் ஏற்படக்கூடிய இடத்தில் பயன்படுத்தினால் தோல் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை சரிசெய்யலாம்.

சிறுநீரை அதிகமாகப் பெருக்கும் சக்தி இதற்கு இருப்பதால், உடம்பில் உள்ள உப்பைக் கரைக்கும் தன்மை உண்டு. கண் குறைபாடுகளை சீர் செய்யும் பீட்டா கரோட்டின், இதில் அதிகமாக உள்ளது.

# தனி நாடுகோரி போராடியவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள்

ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களுடனான நேர்காணல்

**கடந்தவாரத் தொடர்ச்சி...**

**கேள்வி : ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் அல்லது அவருடைய அணி கூட இதுவரை தமிழ் தரப்புடன் தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பிலே எந்த பேச்சுக்களையும் இதுவரை காலமும் நடத்தவில்லை. ஆனால் இனியும் அவர்கள் இப்படியே பிரச்சினைகளை இழுத்தடித்துக்கொண்டு அல்லது அடுத்த தேர்தலை சந்தித்து அடுத்த கட்டம் என்ன செய்வார்கள் என்பது ஒரு கேள்வியாக இருந்தாலும் கூட இவர்கள் இராஜதந்திர ரீதியாகக் கூட தமிழர்களுக்கான தீர்வைக் கொடுக்காது, தொடர்ந்தும் இவ்வாறு தமது கட்டுப்பாட்டின் கீழ் அடிமைத்துவ இனமாக தமிழ் மக்களை மாற்றுவதற்கான திட்டங்களை வகுத்துக்கொண்டிருப்பதாகத்தானே இவர்களது செயற்பாட்டைக் கருத முடியும்?**

**பதில் :** அதிலே எனக்கு மாற்றுக்கருத்து கிடையாது. இந்த அரசாங்கம் எதனையும் தரும் என்று நிச்சயமாக நாங்கள் எதிர்பார்க்கவில்லை. எனவே தான் நாங்கள் இந்த விடயத்தை இந்தியா மூலமாக கையாள வேண்டும் என்று பார்க்கின்றோம். ஆகவே தான் இது சர்வதேச களத்தில் அது அந்த வகையில் கையாளப்பட வேண்டும் என்று பார்க்கின்றோம். இந்த அரசாங்கம் செய்யாது என்பது எங்களுக்கு முழுமையாக விளங்கியிருக்கின்றது. கடந்த 1987 ஆம் ஆண்டு ஒப்பந்தம் உருவாக்கப்பட்டு 1988 இல் மாகாணசபை சட்டம் அமுலில் வந்தது. ஆனால் அதன் பின்னர் 2009 வரை பாரிய யுத்தம் நடந்தது. 2009 க்கு பின்னர் பேச்சு வார்த்தைகள் நடந்தது. எனவே இந்தியா அதில் தலையிடக்கூடிய விடயங்கள் எதுவும் நடக்கவில்லை. முன்னர் இருந்த மைத்திரி ரணில் அரசாங்கத்தில் திரு.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபொழுது அவர் இந்தியா பக்கமே போகவில்லை. அவருடன் பேசவில்லை. இப்பொழுது தான் அவருடன் பேசுவதற்கான முயற்சிகளை நாங்கள் அனைவரும் இணைந்து மேற்கொண்டிருக்கின்றோம். நாங்கள் பேசியவுடனும் இந்தியா செய்யும் என்றல்ல ஏனென்றால் தனது நாட்டு நலன் என்பது இந்தியாவிற்கும் இருக்கின்றது. எனவே இங்கு தமிழ் மக்களின் நலன்கள் இந்தியாவினுடைய நலன்கள் எந்த புள்ளியில் சந்திக்கப்போகின்றன அதனை எவ்வாறு சந்திக்க வைக்கப்போகின்றோம் என்பது தமிழர் தரப்பிலும் இருக்கின்றது. நாங்கள் மௌனிகளாக கண்ணை மூடிக்கொண்டு நடப்பவை நடக்கட்டும் என்று சொன்னால் அது என்னவும் நடக்கலாம்.

ஆனால் எங்களின். தமிழ் மக்களின் இருப்புக்கள் பாதுகாக்க வேண்டும். எதிர்காலத்தில் இந்த மண்ணில் அவர்கள் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லாது இருக்கவேண்டும் என்ற கோணத்தில் நாங்கள் சிந்தித்தால் சில முடிவுகளை எடுத்து செயற்படுத்தவேண்டும். அந்த அடிப்படையில் தான் நாங்கள் தற்பொழுது சில முயற்சிகளை மேற்கொள்கின்றோம் இந்த முயற்சிகள் வெற்றியை நோக்கி போக வேண்டும் என்று விரும்புகின்றோம். இந்த வெற்றியை நோக்கி இதை நகர்த்தப் பார்க்கின்றோம். எனவே முழுமையாக எங்களது கையில் இருக்கின்றது என்பதல்ல ஆனால் நிச்சயமாக அதை நோக்கி போவதற்கான களச்சூழல் இருப்பதாக நான் கருதுகின்றேன். ஆகவே அதை நோக்கி போகலாம்.

**கேள்வி : இதிலே மீனவர்கள் பிரச்சினை தற்பொழுது வட பகுதியிலே தலைதூக்கியிருக்கின்றன. இதிலே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடந்துகொண்ட விதம் தொடர்பாகவும் விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது. அந்த படகுகளை ஏலத்தில் விற்றது தொடர்பாகவும் இந்தியாவில் பல பிரச்சினைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது. இதனை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள்?**

**பதில் :** டக்ளஸ் தேவானந்தா கடற்றொழில் அமைச்சராக இலங்கையில் இருக்கின்றார் அவர் ஒரு தமிழனாக இருக்கின்றார் அவர் இலங்கை தமிழ் கடற்தொழிலாளர்களின் நலன்களை பார்க்கவேண்டியது அவரது கடமை. எனவே அந்த வகையில் அந்த நலன்களை எந்தளவு தூரம் பாதுகாக்கலாம் அதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை செய்யலாம் என்பது அவர் செய்ய வேண்டிய ஒரு விடயம். அதில் எனக்கு மாற்றுக்கருத்துக்கள் கிடையாது. ஆனால் இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் வருவது இன்று நேற்று ஏற்பட்ட விடயமல்ல. அது காலகாலமாக இருக்கின்ற விடயம். என்னைப் பொறுத்தவரை மீனவர்கள் என்பவர்கள் மீன் எங்கு இருக்கின்றதோ மீனை தேடிச்செல்வார்கள். தமிழக மீனவர்கள் பாக்கு நீரினுடைய தங்களுடைய பக்கத்தில் இருக்கின்ற கடலை மிக மோசமாக நாசமாக்கிவிட்டார்கள் என்று தான் நான் கூறுவேன். ஏனென்றால் அவர்கள் பாவிக்கின்ற ரோலர்களும் மடிவலைகளும் கடல் அடி மட்டத்துடனுள்ள சகலவற்றையும் தீர்த்துவிட்டார்கள். இந்த ரோலர்ஸ் பெரும் முதலாளிகளுக்குரியது. கடல் அழிந்துபோவதைப்பற்றி அவர்களுக்கு கவலையில்லை. எனவே தான் தமிழக கடலிலுள்ள மீன்கள் அழிந்து போனதற்கு இந்த ரோலர்சும் மடிவலைகளும் தான் காரணம். ஆகவே முதலாவது தமிழக அரசு அந்த விடயங்களை புரிந்துகொள்ள வேண்டிய ஒரு தேவையிருக்கின்றது. அந்த ரோலர்ஸ்கள் தடை செய்யப்பட்டால் மாத்திரம் தான் தமிழக கடலுக்குள் மீன் வளம் பெருகும் என்பதும் அப்பொழுது தான் அது அவர்களுக்கும் சாத்தியம் என்பதும் ஒரு விடயம்.

எனவே தற்பொழுது அவர்கள் செய்யக்கூடிய விடயங்கள் என்னவென்றால் இவர்களை ஆழ்கடலுக்குள் மீன் பிடிக்க செல்வதற்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுப்பது. அவ்வாறான வசதி வாய்ப்புக்களை தமிழக அரசும் இந்திய அரசும் தமிழக மீனவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்க முடியும். அது முடியாத ஒரு விடயமல்ல. அதற்கான தொழினுட்பம் அவர்களிடம் இருக்கின்றது அதற்கான வசதி வாய்ப்புக்கள் இருக்கின்றது. எனவே நிச்சயமாக அவர்களால் அதனை செய்ய முடியும். எமது பக்கத்தில் இருக்கின்ற மீனவர்களை பொறுத்தவரையில் அவர்களும் தங்களை ஆழ்கடல் மீன்பிடிப்பதில் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டுமாக இருந்தாலும் அந்த உதவிகள் ஒத்தாசைகளை செய்வதற்கு இலங்கை அரசாங்கம் தயாராக இருக்காது. ஏனென்றால் மல்டி டே போர்ட் என்று சொல்வார்கள். ஆழ்கடல் மீன்பிடிக்கு சென்று வாரக்கணக்காக அங்கிருந்து வருவதை மல்டி டே போர்ட் என்று சொல்வார்கள். அதனை வாங்குவதற்கும் பல கோடி ரூபாய் பணம் தேவை. அரசாங்கம் அதற்கு உதவி செய்யுமா? அந்த தொழினுட்பத்தை அவர்களுக்கு வழங்குவார்களா அதெல்லாம் வழங்கப்படுமாக இருந்தால் இந்த பாக்கு நீரிலோ. கடலுக்குள் இந்த பிரச்சினைகள் குறைவடையும்.

எனவே தற்பொழுது இருக்கக்கூடிய பிரச்சினைகள் இரண்டு பக்கத்திலும் அந்த விடயங்களை செய்வதற்கான சிந்தனை இல்லாது இருக்கின்றார்கள் என்பதே எனது முதலாவது கருத்து. ஏற்கனவே மன்மோகன்சிங் அவர்கள் பிரதமராக இருந்தபொழுது நாங்கள் டெல்லிக்கு சென்ற சமயம் இந்த விடயம் அவருடனும் பேசப்பட்டது. இதே கருத்தை நாம் அன்றும் சொல்லியிருந்தோம் ஆனால் எதுவும் செய்யவில்லை. இன்று பல காலத்திற்கு பின்னர் அதே விடயங்கள் தான் சொல்லப்படுகின்றது. தமிழ் நாட்டு அரசாங்கம்முதலாவதுதனதுகடற்பரப்பிற்குள் மீன் அழிந்துபோனமைக்கான காரணங்கள் என்ன என்பது பற்றி அவர்கள் பார்க்க வேண்டும். அழிந்து போனதன் காரணமாகத்தான் இலங்கை கடல் பரப்பிற்குள் வந்திருக்கின்றார்கள் என்பதை அவர்கள் பார்க்க வேண்டும். ரோலர் பாவிக்கப்பட்டால் இலங்கை கடற் பரப்பிற்குள்ளும் இதே நிலைமை தான் ஏற்படும் என்பதை அவர்கள் யோசிக்க வேண்டும். எனவே இதற்கான மாற்றுவழி என்ன என்பது சொல்லப்பட்டிருக்கின்றது அதனை செயற்படுத்துவதற்கு அவர்கள் முயற்சிக்கவேண்டும்.இதைதீர்க்கவேண்டிய பொறுப்பும் கடமையும் இந்திய இலங்கை அரசாங்கங்களுக்கு இருக்கின்றது. அவர்கள் இதனை சரியான முறையில் கையாள முடியும் ஆனால் அதனை என்ன காரணத்திற்காகவோ இதுவரை காலமும் செய்யாதிருக்கின்றார்கள்.

**கேள்வி : மாகாணசபை தேர்தலை அரசாங்கம் நடத்தக்கூடிய சூழல் உருவாக்கப்படுமா? அல்லது இதனை நடத்தினால் அரசாங்கத்திற்கு பாதகமான தன்மை ஏற்படுமா?**

**பதில் :** ஒன்று நீங்கள் கூறிய இந்த அரசாங்கம் எந்த தேர்தலையும் நடத்துகின்ற சூழலில் தற்பொழுது இல்லை. அதற்கு முக்கிய காரணம் முதலாவது அவர்கள் தோற்றுவிடுவார்கள் என்ற பயம். ஏனென்றால் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் நாடு இருக்கின்றது. அது அனைவருக்கும் தெரிந்த விடயம். முக்கியமாக இலங்கையினுடைய சிங்கள முஸ்லிம் விவசாயிகள் அனைவரும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஏனென்றால் அவர்களுடைய விவசாயம் மிக மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் ஒரு தேர்தலுக்கு போவார்களாக இருந்தால் அது உள்ளூராட்சி சபை தேர்தல். மாகாணசபை தேர்தல். பாராளுமன்ற தேர்தல் என எதுவாக இருந்தாலும் தற்பொழுது இருக்கும் ஆளுங்கட்சி தோல்வியடைவதற்கான சந்தர்ப்பங்கள் மிக அதிகமாக இருக்கின்றது. எனவே தான் உள்ளூராட்சி சபை தேர்தல்களும் ஒரு வருடத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. மாகாண சபைத் தேர்தல்கள் கடந்த மூன்று நான்கு வருடங்களாக நடைபெறாமல் இருக்கின்றது. ஆகவே மாகாணசபை தேர்தல்களை அரச தரப்பில் சிலர் காலம் வருகின்றபொழுது நாங்கள் நடத்துவோம் என கூறுகின்றார்கள். அதாவது தற்பொழுது இருக்கின்ற அரசு சட்டத்தின் பிரகாரம் மாகாணசபைத் தேர்தல்கள் என்பது நடத்தப்படவேண்டும். அதற்கு கால எல்லை வரையறை செய்யப்படவில்லை என்ற ஒரு விடயம் இருக்கின்றது. எனவே நான் நம்புகின்றேன் புதிய அரசியல் சாசனம் ஒன்று வந்து மாகாணசபை முறை ஒழிக்கப்பட்டாலே தவிர மாகாணசபை தேர்தல் என்ற ஒன்று நடத்தப்படத்தான் வேண்டும். அது எப்பொழுது என்பது தான் இருக்கக்கூடிய கேள்வி.

ஆனால் அது இந்த வருடத்திற்குள் நடக்கும் என்று நான் கருதவில்லை. ஏனென்றால் இன்னும் அவர்கள் இந்தியாவிடமும் சீனாவிடமும் பாகிஸ்தானிடமும் பங்களாதேஷிடமும் பல நாடுகளில் அவர்கள் இன்னும் பிச்சை எடுத்துக்கொண்டு தான் திரிகின்றார்கள். தற்போது ஏழரை மணி நேர மின்சார வெட்டு வந்திருக்கின்றது. அவுஸ்திரேலியாவிடம் 200 மில்லியன் கடன் கேட்கின்றார்கள் பால்மாவை இறக்குமதி செய்வதற்கு. இந்தியாவிடம் 500 மில்லியன் கடன் கேட்கின்றார்கள் பெற்றோலியம் இறக்குமதி செய்வதற்கு. கிட்டத்தட்ட 6.5 பில்லியன் டொலரை இந்த வருடம் அவர்கள் கடனாக செலுத்த வேண்டியிருக்கின்றது. எனவே அந்தளவு பெரிய வருமானமில்லாத ஒரு நாடாக இருக்கின்றது.

எனவே மிக மோசமான ஒரு பொருளாதார நெருக்கடிக்குள் இருக்கின்றார்கள். பொருளாதாரத்தை கையாளும் திறன் அற்றவர்களாகவும் இருக்கின்றார்கள். விவசாயம் மோசமான நிலையில் இந்த வருடம் வீழ்ச்சியடைந்திருக்கின்றது. ஒருபுறம் உரம் இல்லாத சூழ்நிலை. தற்பொழுது பார்த்தால் அற்பசொற்பமாக இருந்த விளைச்சல் கூட வந்திருக்கக்கூடிய மழையால் அம்பாறையில் 3000 ஏக்கர் சேதமடைந்திருக்கின்றது. அதைப்போன்று வவுனியாவில் உளுந்து. பயறு போன்றனவும். முல்லைத்தீவில் கடலை போன்றனவும். கிளிநொச்சி பூநகரி போன்ற இடங்களிலும் இறுதிக்கட்டமாக வெட்ட இருந்த நெல் அனைத்தும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே விவசாய பாதிப்பு என்பது மிகப்பெருமளவில் 2022 ஆம் ஆண்டு வீழ்ச்சியை சந்தித்திருக்கின்றது. அரசாங்கம் மிக மோசமான பொருளாதார நிலையில் இருக்கின்றது. அரசாங்கத்தின் மீது மக்கள் மிகவும் கோபமுற்று இருக் கின்றார்கள். எனவே அந்த வகையில் இவர்கள் என்ன சொன்னாலும் தோற்போம் என்று தெரிந்துகொண்டு ஒரு அரசாங்கம் தேர்தலுக்கு போகுமா என்பதொரு கேள்வி. எனவே இந்த வருடம் இவர்கள் தேர்தலுக்கு போவார்கள் என நான் கருதவில்லை.




**நேர்காணல் : இரணியன்**

# விளையாட்டு செய்திகள்

## மகளிர் உலகக் கிண்ணம் தொடங்குவதில் தாமதம்



மகளிர் உலகக் கிண்ணம் நியூசிலாந்தில் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. தொற்றுநோய் தொடர்பான தடைகளைத் தாண்டி, பெண்கள் விளையாட்டில் அதிகரித்து வரும் ஆர்வத்தைப் பயன்படுத்த அமைப்பாளர்கள் ஆர்வமாக உள்ளனர்.

எட்டு நாடுகளின் போட்டி முதலில் 2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் திட்டமிடப்பட்டது. ஆனால் கொரோனா வைரஸ் தொடர்பான பயணக் கட்டுப்பாடுகள் அணிகளை நியூசிலாந்திற்குள் அழைத்துச் செல்வது சாத்தியமற்றதைத்தொடர்ந்து இந்த ஆண்டு மார்ச் வரை ஒத்திவைக்கப்பட்டது. இப்போதும் கூட, வெளிநாட்டு வீரர்கள் 10 நாட்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும் மற்றும் கடுமையான "குமிழி" சுகாதார நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

மிகவும் பரவக்கூடிய ஒமிக்ரோன் மாறுபாட்டின் வெடிப்பைக் கட்டுப்படுத்த போட்டியை நடத்தும் நாடு முயற்சிப்பதால் கூட்டமும் கட்டுப்படுத்தப்படுகிறது. அதாவது பார்வையாளர்கள் அரங்கைச் சுற்றி 100 புள்ளிகள் கொண்டதாக இருக்க வேண்டும். வீரர்கள் மத்தியில் நேர்மறையான சோதனைகள் குறித்த அச்சம் நிகழ்வின் மீது தொங்கிக்கொண்டிருக்கும் போது, போட்டியின் தலைமை நிர்வாகி அண்ட்ரியா நெல்சன், பெரும்பாலான தற்செயல்களை சமாளிக்கும் வகையில் திட்டங்கள் இருப்பதாக கூறினார்.

2017 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற போட்டியை, நடத்தும் நாடு வென்றது. உலகம் முழுவதும் 180 மில்லியன் பார்வையாளர்களால் பார்க்கப்பட்டது. ஆனால் நெல்சன், அவுஸ்திரேலியாவில் 2020 ரி 20 மகளிர் உலகக் கிண்ணத்தை சுட்டிக்காட்டி, பெண்கள் கிரிக்கெட்டிற்கான சாத்தியம் இன்னும் பெரியது என்றார். "கிரிக்கெட்டுக்கு இவ்வளவு பெரிய மற்றும் வளர்ந்து வரும் பார்வையாளர்களை நாங்கள் பெற்றுள்ளோம். ரி 20 மகளிர் உலகக் கிண்ண இறுதிப் போட்டியை உலகம் முழுவதும் 1.1 பில்லியன் மக்கள் பார்த்துள்ளனர். இது ஆண்களுக்கான ரக்பி உலகக் கோப்பையை ஒப்பிடுகையில் குறைவானது. என்று அவர் கூறினார்.

இது போட்டி 12 வது பதிப்பாகும். ஆறு முறை வெற்றியாளர்களான அவுஸ்திரேலியா நுழைகிறது. அதைத் தொடர்ந்து நான்கு முறை கிண்ணத்தை வென்ற தற்போதைய சம்பியன் இங்கிலாந்து. கடைசியாக 2000 ஆம் ஆண்டில் போட்டியை நடத்தியபோது நியூசிலாந்து மட்டுமே வென்றது. அதே நேரத்தில் இந்தியா 2005 மற்றும் 2017 இல் இறுதிப் போட்டியில் தோற்கடித்தது. பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள் மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகள் களத்தை சுற்றி வருகின்றன.

## ICC தரவரிசையில் பாபர் அசாம் தொடர்ந்தும் முதலிடத்தில்

ICC ரி20 கிரிக்கெட் வீரர்களுக்கான தரவரிசையில் இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் பெத்தும் நிஸ்ஸங்க. இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் ஸ்ரேயாஸ் ஐயர் ஆகியோர் முன்னேறியுள்ளனர். ரி20 துடுப்பாட்ட வீரர்களின் பட்டியலில் பாபர் அசாம் தொடர்ந்தும் முதல் இடத்திலும். இரண்டாம் இடத்தில் பாகிஸ்தான் அணியின் மற்றுமொரு வீரரான மொஹமட் ரிஸ்வானும் உள்ளனர். மூன்றாம் இடத்தில் எய்டன் மெக்ரம் தரப்படுத்தப்பட்டுள்ளார். தரவரிசையில் விராட் கோலி பின்னடைவைச் சந்தித்துள்ளார்.

இலங்கை அணியின் பெத்தும் நிஸ்ஸங்க 6 இடங்கள் முன்னேறி 9ஆவது இடத்தை பெற்றுள்ளார். இந்திய அணிக்கு எதிரான ரி20 தொடரின்போது இரண்டாவது போட்டியில் 75 ஓட்டங்களை பெற்றுக்கொண்டமை ஊடாக அவருக்கு 9ஆவது இடம் கிடைக்கப்பெற்றுள்ளது. இலங்கை அணியின் தசுன் ஷானக்க 18 இடங்களில் முன்னேறி 46ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளார். ஸ்ரேயாஸ் ஐயர் இலங்கை அணிக்கு எதிரான ரி20 தொடரில் தொடர்ச்சியாக 3 சதங்கள் உள்ளடலங்காக 204 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட நிலையில். 27 இடங்கள் முன்னேறி தரவரிசையில் 18ஆவது இடத்தை பெற்றுள்ளார்.

விராட் கோலி 15ஆவது இடத்தில் பட்டியலிடப்பட்டுள்ளார். ஒருநாள் துடுப்பாட்ட வீரர்களின் பட்டியலிலும் பாகிஸ்தான் அணியின் பாபர் அசாம் முதலிடத்தில் காணப்படுவதோடு. இரண்டாம். மூன்றாம் இடங்களில் விராட் கோலி. ரோஹித் ஷர்மா ஆகியோர் காணப்படுகின்றனர். இலங்கை அணியின் அவிஷ்க பெனாண்டோ 40ஆவது இடத்திலும். சரித் அசலங்க 41ஆவது இடத்திலும். குசல் ஜனித் பெரேரா 45ஆவது இடத்திலும் ஒருநாள் வீரர்களின் பட்டியலில் தரப்படுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை. ரி20 பந்துவீச்சாளர் வரிசையில் முதலிடத்தில் இருந்த வனிந்து ஹசரங்க படிப்படியாக தரவரிசையில் சரிவடைந்து 6ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார். அவுஸ்திரேலிய தொடரின் போது கொவிட் தொற்றுக்குள்ளான அவர். அதன் பின்னர் இந்தியாவுடன் இடம்பெற்ற போட்டியிலும் பங்குபற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ரி20 பந்துவீச்சாளர் தரப்படுத்தலில் தென்னாபிரிக்காவின் தப்ரைஸ் ஷம்சி முதல் இடத்தில் உள்ளார்.

## உலக டென்னிஸ் தரவரிசையில் முதல் இடத்தை பிடித்தார் மெட்விடேவ்

உலக டென்னிஸ் வீரர்களின் புதிய தரவரிசைப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 2வது இடம் வகித்த 26 வயது ரஷ்ய வீரர் டேனில் மெட்விடேவ் முதல்முறையாக 'முதல்' அரியணையை அலங்கரித்து இருக்கிறார். கடந்த வாரம் நடந்த மெக்சிகோ ஓபன் டென்னிஸ் போட்டியில் அரை இறுதிக்கு முன்னேறியதன் மூலம் மெட்விடேவ் (8.615 புள்ளிகள்). முதலிடத்தில் இருந்த செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சை (8.465 புள்ளிகள்) 2-வது இடத்துக்கு தள்ளி முதலிடத்தை சொந்தமாக்கினார்.

2020-ம் ஆண்டு உலக சுற்றுலா இறுதி சுற்று போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற மெட்விடேவ், கடந்த ஆண்டு (2021) அமெரிக்க பகிரங்க பட்டத்தை கைப்பற்றினார். அத்துடன் கடந்த 2 ஆண்டுகளாக அவுஸ்திரேலிய பகிரங்க போட்டியில் இறுதிப்போட்டிக்கு முன்னேறி அசத்தினார் என்பது நினைவுகூரத்தக்கது. 20 கிராண்ட்ஸ்லம் பட்டங்கள் வென்றவரான 34 வயது நோவக் ஜோகோவிச் கடந்த 2020-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் தொடர்ச்சியாக முதல் இடத்தை ஆக்கிரமித்து இருந்தார். முதல் இடத்தை மொத்தம் 361 வாரங்கள் பிடித்து சாதனை படைத்து இருந்த ஜோகோவிச் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளாததால், கடந்த ஜனவரி மாதம் மெல்போர்னில் நடந்த அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் போட்டியில் பங்கேற்க சென்ற அவரது விசாவை இரத்து செய்த அவுஸ்திரேலிய அரசு அவரை திருப்பி அனுப்பியது. இதனால் அவர் அவுஸ்திரேலிய பகிரங்க போட்டியில் பங்கேற்கவில்லை. அத்துடன் கடந்த வாரம் துபாயில் நடந்த சர்வதேச டென்னிஸ் போட்டியில் அவர் கால் இறுதியில் தோல்வி கண்டு நடையை கட்டினார். இவை அவரது நீண்ட கால 'முதல் இடம்' ஆதிக்கம் முடிவுக்கு வர காரணமாக அமைந்தது.

1973-ம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ள ஆண்கள் ஒற்றையர் தரவரிசைபட்டியலில் முதலிடத்தை பிடித்த 27-வது வீரர் மெட்விடேவ் ஆவார். மேலும் அவர் 'முதல்' இடத்தை பிடித்த 3-வது ரஷ்ய வீரர் என்ற பெருமையையும் பெற்றார். இதற்கு முன்பு ரஷ்ய வீரர்களில் கபெல் நிகோவ் (1999-ம் ஆண்டு). மரட் சபின் (2000) ஆகியோர் முதலிடத்தை வகித்துள்ளனர். கடந்த 18 ஆண்டுகளில் ஜோகோவிச், ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), ரபெல் நடால் (ஸ்பெயின்), அன்டி முர்ரே (இங்கிலாந்து) ஆகியோரை தவிர்த்து 'முதல்' இடத்துக்குள் நுழைந்த முதல் வீரர் என்ற சிறப்பையும் மெட்விடேவ் தனதாக்கினார்.

'முதல்' இடத்தை பிடித்த டேனில் மெட்விடேவ் கருத்து தெரிவிக்கையில், 'முதல் இடத்தை பிடித்தது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இளம் வயதில் மட்டுமன்றி சமீபகாலங்களிலும் இது தான் எனது இலக்காக இருந்தது. டென்னிஸ் வீரர்கள் உட்பட பலரும் வாழ்த்துகள் தெரிவித்தனர். எனக்கு ஆதரவு அளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து கொள்கிறேன்' என்றார்.

ஜெர்மனி வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் (7.515 புள்ளிகள்) 3-வது இடத்தில் நீடிக்கிறார். மெக்சிகோ பகிரங்க போட்டியில் பட்டம் வென்ற ஸ்பெயினின் ரபெல் நடால் (6.515 புள்ளிகள்) ஒரு இடம் உயர்ந்து 4-வது இடத்தையும், கிரீஸ் வீரர் சிட்சிபாஸ் (6.445 புள்ளிகள்) ஒரு இடம் சரிந்து 5-வது இடத்தையும், ரஷ்ய வீரர் ஆந்த்ரே ரூப்லெவ் (5.000 புள்ளிகள்) ஒரு இடம் முன்னேறி 6-வது இடத்தையும், இத்தாலி வீரர் பெரேட்டினி (4.928 புள்ளிகள்) ஒரு இடம் சறுக்கி 7-வது இடத்தையும் பிடித்தனர். நோர்வேயின் கேஸ்பர் ரூட் (3.915 புள்ளிகள்) 8-வது இடத்திலும், கனடாவின் அலியாசிம் (3.883 புள்ளிகள்) 9-வது இடத்திலும் தொடருகின்றனர். போலந்தின் ஹூபர்ட் ஹூர்காஸ் (3.496 புள்ளிகள்) ஒரு இடம் உயர்ந்து 10-வது இடத்தை பெற்றுள்ளார்.





# உலக பார்வை



## போரை முடிவுக்கு கொண்டுவர ஒரே வழி புதினுடன் நேரடி பேச்சு மட்டுமே - அதிபர் ஜெலன்ஸ்கி



உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்து 9வது நாளாக தாக்குதல் நடத்தி வருகிறது. ரஷ்ய தாக்குதலுக்கு உக்ரைன் படைகளும் பதிலடி கொடுத்து வருகின்றன. இரு தரப்பு மோதலில் பலர் உயிரிழந்துள்ளனர். உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் தாக்குதலுக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

உக்ரைன் தலைநகர் கீவ் நோக்கி வரும் ரஷ்ய படைகளை உக்ரைன் பாதுகாப்புப் படையினர் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், ரஷ்ய படைகள் தங்கள் தாக்குதலை தொடர்ந்து தீவிரப்படுத்தி வருகின்றன.

போரை முடிவுக்கு கொண்டு வர நடத்தப்பட்ட இரு கட்ட பேச்சுவார்த்தையும் தோல்வியிலே முடிந்துள்ளது. சண்டை நடைபெறும் பகுதிகளில் இருந்து பொதுமக்களை வெளியேற்ற இருநாடுகளும் சம்மதம் தெரிவித்துள்ளதால் சண்டையின் தீவிர தன்மை சற்று குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், ரஷ்ய அதிபர் புதின் நேரடி பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி அழைப்பு விடுத்துள்ளார். இதுதொடர்பாக ஜெலன்ஸ்கி கூறுகையில், ரஷ்ய அதிபர் புதின் என்னுடன் அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்த முன்வரவேண்டும். அது ஒன்றே போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான வழி. 30 மீட்டர் இடைவெளியில் அல்ல. நான் கடித்துவிடமாட்டேன். நீங்கள் எதற்காக பயப்படுகிறீர்கள்? என கேள்வி எழுப்பியுள்ளார்.

## 36 நாடுகளுக்கு ரஷ்ய வான் பகுதியில் தடை

பிரிட்டன், ஜெர்மனி உள்ளிட்ட 36 நாடுகளிலிருந்து வரும் விமானங்களுக்கு ரஷ்யா தனது வான் பகுதியை மூடியுள்ளது.

அதன் விமானங்களுக்கு ஐரோப்பிய நாடுகள் தடை விதித்ததைத் தொடர்ந்து அந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் முதலில் ரஷ்யாவின் எரோப்லோட் விமானச் சேவைக்கும் தனியார் விமானச் சேவைகளுக்கும் தடை விதித்திருந்தது. ரஷ்யா பதில் நடவடிக்கையாகக் கடந்த வாரம் பிரிட்டனின் விமானச் சேவைகளுக்குத் தடை விதித்தது.

பின்னர், நாடுகளின் ஆகாயவெளியை ரஷ்ய விமானங்களுக்கு மூடவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது. தடை விதிக்கப்படுவதால் விமானங்களின் பயணப்பாதைகளை மாற்றவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அதனால் பயணச்சீட்டுகளின் விலை உயரும் என்று கருதப்படுகிறது.

## போரை நிறுத்துங்கள் - மணல் சிற்பம் வரைந்து வலியுறுத்தல்

கடந்த மாதம் பொலிவுட் இசையமைப்பாளர் பப்பி லஹிரி மறைவுக்கு சுதர்சன் பட்நாயக் மணல் சிற்பம் வரைந்து அஞ்சலி செலுத்தினார் என்பது நினைவு கூரத்தக்கது.

ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த சுதர்சன் பட்நாயக், சிறந்த மணல் சிற்ப கலைஞராவார்.

உலகில் நடந்து வரும் அனைத்து விஷயங்கள் தொடர்பாக தனது கருத்தை தயங்காமல் தெரிவித்து வருபவர். எந்த விஷயமானாலும் அது தொடர்பாக ஒடிசா கடற்கரையில் மணல் சிற்பங்களை வரைந்து வருபவர். பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.

இதற்கிடையே, உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்து 9வது நாளாக தாக்குதல் நடத்தி வருகிறது. ரஷ்ய தாக்குதலுக்கு உக்ரைன் படைகளும் பதிலடி கொடுத்து வருகின்றன. உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் தாக்குதலுக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், உக்ரைன் மீது போர் தொடுத்துவரும் ரஷ்யா தாக்குதலை நிறுத்தவேண்டும் என வலியுறுத்தி ஒடிசா பூரி கடற்கரையில் மணல் சிற்பம் வரைந்து வலியுறுத்தி உள்ளார் சுதர்சன் பட்நாயக். ரஷ்ய அதிபர் புதின் மற்றும் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி ஆகியோரிடம் போரை நிறுத்துங்கள் என ஒருவர் வலியுறுத்தும் விதமாக இந்த மணல் சிற்பம் வடிவமைக்கப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் ஆளும் கட்சிக்கு வெளிநாட்டிலிருந்து நிதி

பாகிஸ்தானின் ஆளும் தஹ்ரீக்கே இன்சாப் கட்சிக்கு 14 நாடுகளில் இருந்து இரண்டு மில்லியன் டொலர்களுக்கு மேலான பரிவர்த்தனைகள் மற்றும் கட்சியின் வங்கிக் கணக்குகளில் பல நூறு மில்லியன் ரூபா உள்ளூர் பரிவர்த்தனைகள் இடம்பெற்றிருப்பது பாகிஸ்தான் தேர்தல் ஆணையத்திற்கு அந்நாட்டு மத்திய வங்கி அளித்த ஆவணத்தில் தெரியவந்துள்ளது.

இதில் இந்தியநாட்டுபெண்தொழிலதிபர்மற்றும்அவரதுபாகிஸ்தானிய அமெரிக்கரான கணவர் 2013இல் 29,800 டொலர் நன்கொடையை அந்தக் கட்சிக்கு வழங்கியுள்ளது. வெளிநாடுகளில் இருந்து நன்கொடை பெற தடை உள்ளமை குறிப்பிடத்தக்கது.




## 4,000 ஆடம்பர கார்களுடன் மூழ்கிய சரக்குக் கப்பல்



ஆயிரக்கணக்கான ஆடம்பரக் கார்களை ஏற்றிச் சென்ற சரக்குக் கப்பல் ஒன்று தீப்பற்றி இரண்டு வாரங்களின் பின் போர்த்துக்கல் அசோர்ஸ் (Azores) தீவுக்கூட்டமுள்ள கடல் பகுதியில் மூழ்கியுள்ளது.

பெலிசிட்டி ஏஸ் (Felicity Ace) என்ற பெயர் கொண்ட இந்தக் கப்பலில் 1,100 Porsches (போர்ஷஸ்) மற்றும் 200 Bentleys (பென்ட்லீஸ்) உள்ளிட்ட Volkswagen குழுமத்தைச் சேர்ந்த சுமார் 4,000 கார்கள் இருந்துள்ளன.

இதிலிருந்த பொருட்களின் பெறுமதி சுமார் 438 மில்லியன் டொலர் எனவும் அதில் கார்களின் பெறுமதி 400 மில்லியன் டொலர் என தெரிவிக்கப்படுகின்றது.

ஜேர்மனி துறைமுகமான எம்டனில் இருந்து அமெரிக்காவின் ரோட் தீவுகளை நோக்கி பயணித்துக்கொண்டிருந்தபோது இந்தக் கப்பல் தீப்பிடித்தது.

தற்போது அட்லாண்டிக் பெருங்கடலின் ஒரு கரையிலிருந்து 1,000 மைல் தொலைவில் தீ பிடித்தபோது இக்கப்பலில் இருந்த 22 பணியாளர்களையும் மீட்புக் குழுவினர் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

































இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 06.03.2022 அன்று வெளியிடப்பட்டது.